www.padippakam.com

# தமிழ்நேயம்

இதழ் - 10 மே 1999

## பியாண்ட் 2000




படிப்பகம்

www.padippakam.com

●

தமிழ் இன்று கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. தமிழ்ச் சான்றோர் பலர் உண்ணாநோன்பிலிருந்து உயிர் துறக்க முனைந்துள்ளனர். இந்நிலையில் தமிழ் எழுத்தாளர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? தமிழ் அழியாது என்று ஜெயகாந்தன் சொல்லுகிறார். தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தோற்றுவிப்பதை அரசியல் இயக்கங்கள் ஒப்புக் கொள்வதில்லை. உண்ணாநோன்பு இருப்பதை சிலர் தமிழ்வெறி என்று கூறுகின்றனர். தினத்தந்தி, குமுதம் முதலியவை என்றைக்கும் இருக்கும். தமிழ் சினிமாக்கள் ஓயப்போவது இல்லை. சன் தொலைகாட்சியும்தான். சட்டசபையில் கூச்சல் போடுவதற்கும் தமிழ் என்றும் தேவை. ஆகவே தமிழ் அழியாது என்பது சரிதானா?

இலக்கியம் மக்கள் வாழ்வோடும் விடுதலையோடும் இரண்டற கலந்தது. வாழ்க்கை என்பது வரலாற்று நீரோட்டத்திலிருந்து எழுவது மெய்யியல் இல்லாமல் நமக்கு வாழ்வு இல்லை. பெருமைக்காகவோ, பணத்திற்காகவோ எழுதுபவன் இழிபிறவி. தமிழை வைத்து பிழைக்கும் எவனும் தமிழையும் தமிழ் மக்களையும் அழிப்பவன்.

அசோகமித்ரன் தொடங்கி எல்லா எழுத்தாளர்களையும் கேட்டுக் கொள்கிறோம். சந்தைப் பொருளாதாரம் திணிக்கப்பட்டபோது நீங்கள் வாய்திறக்கவில்லை. அரசியல் கட்சிகளின் ஊழல்கள் குறித்து அமைதியாக இருந்தீர்கள். எத்தனையோ இழிவுகளை உள்வாங்கிக் கொண்டு புழுங்கிக் கொண்டுதான் இருந்தீர்கள். திராவிட இயக்கம் குறித்து உங்களில் பலருக்கு மரியாதை இல்லை. தூய இலக்கியம் தான் வேண்டுமென்று மார்க்சியத்தை ஒதுக்கினீர்கள். முற்போக்குவாதம் என்று சொல்லி தமிழ்த்தேசியத்தை வெறுத்தீர்கள். இப்பொழுது தமிழை வாழ வைப்பதற்கான போர் தொடங்கியுள்ளது. இப்பொழுதும் உங்களுக்குள்ளே புதைந்தும் புதைந்தும் அழிந்துவிடப் போகிறீர்களா? தமிழுக்காகவும் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் புதிய தமிழிலக்கியம் படைக்கப் போகிறீர்களா? உங்கள் நிலைப்பாடு என்ன? எல்லோர் பெயரையும் சொல்வதற்கு இங்கு இடமில்லை. எல்லா எழுத்தாளர்களுக்கும் தான் இந்த வேண்டுகோள். உங்கள் பதிலை தமிழ்நேயம் எதிர்பார்க்கிறது. சிற்றிதழாளருக்கும் சேர்த்துத்தான் இந்த வேண்டுகோள்.

●

கொலாட்ஜ் என்று குறிப்பிடுவதை தமிழில் கலப்படம் என்றோ அலங்கோலம் என்றோ சொல்லுவது பொருத்தமாக இருக்கலாம். இன்றைய வாழ்வு எல்லா வகைகளிலும் அலங்கோலமாக அமைந்திருப்பதை இந்த இதழின் அட்டை எடுத்துக்காட்டுகிறது. வாழ்வின் அனைத்துக் களங்களும் ஒன்றை மற்றது ஊடறுப்பதாகவும் இருக்கத்தான் செய்கிறது. அட்டையை வடிவமைத்தவர் திரு. மதுசூதனன்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்தேசம்
# ஆசிரியர் உரை

●

இந்தியாவில் மீண்டும் ஒரு தேர்தலை மக்கள் மீது சுமத்தி இருக்கிறார். அரசுக்கு செலவு ரூ. 1000 கோடி. கட்சிகளும் வேட்பாளர்களும் செய்யும் செலவு இதைவிட 10 மடங்கு இருக்க கூடும். மக்களிடமிருந்து இவ்வளவு தொகையைப் பறித்துதான் இவர்கள் தேர்தலெனும் ஆர்ப்பாட்டத்தைச் செய்ய முனைந்திருக்கிறார்கள். மக்களைக் கொள்ளையடிப்பதும் ஆதிக்கம் செய்வதும் இவர்கள் நோக்கம். இப்படிச் செய்வதற்கு இவர்கள் யாரும் வெட்கப்படவில்லை.

மக்களுக்கு எதிரான அரசியல்தான் இன்று நடைபெறுகிறது. இதில் காங்கிரசுக்கும் பாரதிய ஜனதாவிற்கும் இடையில் வேற்றுமை இல்லை. இதில் தி.மு.க. என்ன? அ.தி.மு.க. என்ன? எல்லாருமே ஒன்றுதான். ஊழல் பெரிதா? மதவாதம் பெரிதா? என்று இவர்கள் பட்டிமன்றம் நடத்துவது மக்களை ஏமாற்றுவதற்குத் தான். இவர்களுக்கிடையில் ஒடி ஒடி உபதேசம் வழங்குகிறார்கள் கம்யூனிஸ்டுகள். மக்கள் விரோத அரசியலில் இவர்கள் எல்லாருமே இணைந்து இருக்கிறார்கள். மற்ற துண்டு துக்கானிகள் குறித்து நாம் எதுவும் சொல்லவேண்டியதில்லை. இவர்கள் அனைவருக்கும் சந்தைப் பொருளாதாரம், சீர்கெட்ட முதலாளியம், ஊழல் வளர்க்கும் அரசதிகாரம், ஏற்றதாழ்வான சமூக அமைப்பு, சாதி, மதக் கலவரங்கள், நவீன நாகரிகம், இராணுவப் பெருக்கம், அணுகுண்டுகள், இயற்கை நாசம், நுகர்வியம் முதலிய அனைத்தும் வேண்டும். இவர்கள் நலத்திற்காக மக்கள் நாசமாக வேண்டும். இதற்காக இன்னுமொரு தேர்தல். இவர்களனைவரையும் குழிதோண்டிப் புதைப்பதற்கான அரசியல் இயக்கம் என்று உருவாகும்?

●

செர்பியாவின் மீது 40 நாட்களுக்கு மேலாக நேட்டோ நாடுகளின் விமானத் தாக்குதல் தொடர்கிறது. இதுவரை செர்பியா விட்டுக் கொடுக்கவில்லை. கொசாவாவிலிருந்து எட்டு லட்சம் அல்பேனியர்கள் வெளியேறி அகதிகளாகி அவதிப்படுகின்றனர். ஈராக்கின் இராணுவ வலிமையை அழிப்பதைப் போலவே செர்பியாவின் இராணுவ வலிமையை அழிப்பது அமெரிக்காவின் நோக்கமாக இருக்க முடியும். ஒரு துருவ உலகமாக்கம் என்பது இதுதான் என்று தோன்றுகிறது. இராணுவ வலிமை பெற்று வரும் இந்தியாவிற்கும் இப்படி ஒரு நெருக்கடி எதிர்காலத்தில் நேரலாம். காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை தேவையென்று நெல்சன்மண்டேலாவும் கூறுகிறார். கொசாவோவின் அல்பேனியர்களைப் போலவே குர்தியர்களும் ஈழத் தமிழ் மக்களும் இன ஒழிப்புக்கு உள்ளாகி வரும் கொடுமை சொல்லில் அடங்காது. 21–ஆம் நூற்றாண்டு நமக்கு எந்த வெளிச்சத்தைத் தரும்?

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்நேயம்
# அகமும் புறமும்

தமிழ்ச் சான்றோர் பேரவையினர் தாங்கள் திட்டமிட்டபடி பட்டினிப்போராட்டத்தை ஓரளவிற்கேனும் வெற்றியோடு முடித்துள்ளனர். இதற்காக தமிழ்ப் பற்றாளர்கள் சார்பில் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

98 நவம்பர் முதல் நாளிலேயே அறிவிக்கப்பட்டது இந்தப் போராட்டம். அரசு கண்டு கொள்ளவில்லை. 99 சனவரி நடுவில் தொடக்கப்பள்ளிகளில் தமிழ் ஒரு கட்டாய பாடம். ஆங்கிலத்தில் அறிவியல். மற்ற மூன்று பாடங்களில் இரண்டேனும் தமிழில், என்ற அறிவிப்பை முதல்வர் வெளியிட்டார். தயக்கத்தோடுதான் தமிழ்ச் சான்றோர் முதல்வருக்கு பாராட்டுத் தெரிவிக்கச் சென்றனர். முதல்வரின் அறிவிப்பு தமிழ்ச் சான்றோருக்கு நிறைவு தரவில்லை. மார்ச் 23 இல் தமிழகம் முழுவதும் அறுபதிற்கும் மேற்பட்ட இடங்களில் பட்டினிப்போர் நடைபெற்றது. அரசு கண்டு கொள்ளவில்லை. இரண்டொரு செய்தித்தாள்கள் மட்டும் பட்டினிப்போரை கண்விழித்துப் பார்த்தன. அரசியல் இயக்கங்கள் வாய்திறக்கவில்லை. மூன்றில் ஒன்றேனும் தமிழில் என்று சட்டசபையில் கல்வி அமைச்சர் அறிவித்தார். அரசியல் நிலநடுக்கம் என்று கூறி அனைவருமே தமிழ்க்கல்வி குறித்து சிந்திக்கவில்லை.

ஏப்ரல் 25ல் நூறு தமிழ்ப்பற்றாளர்கள் சாகும்வரை உண்ணாநோன்பிற்காக சென்னையில் கூடுகின்றனர். 23 இரவில் தமிழ்ச் சான்றோரோடு கல்வி அமைச்சரும், பண்பாட்டுத்துறை அமைச்சரும் பேசுகின்றனர். கலைஞர் அறிக்கை விடுக்கிறார். போராட்டத்திலிருந்து சிலம்பொலியார் விலகுகிறார். திட்டமிட்டபடி 25 இல் பட்டினிப் போர் தொடங்குகிறது. தமிழ் அறிஞர்களோடு பண்பாட்டுத் துறை அமைச்சர் கலந்துரையாடுகிறார். 26 இல் உடன்பாடு ஏற்படுகிறது. உண்ணாநோன்பை தமிழ்ச் சான்றோர் முடித்துக் கொள்கின்றனர். இடையில் என்னவெல்லாம் நடைபெற்றது.

கலைஞரின் அறிக்கை குறித்து நாம் மரியாதையோடு பேச முடியாது. எதிரிகளை கிளப்பிவிடக்கூடிய அறிக்கை. கலைஞரின் தமிழ்ப்பற்றை கேள்விக்குள்ளாக்கக்கூடிய அறிக்கை. தமிழகத்தின் முதல்வர் என்ற தகுதிக்கு இழுக்குத் தேடுகின்ற அறிக்கை. பல மொழி பேசுகின்ற ஒரு மாநிலத்தில் ஒரு மொழியை கல்விமொழியாக திணிக்க முடியுமா? என்கிறார். சிறுபான்மையினர் மீது தமிழை திணிக்க முடியுமா? என்கிறார். சட்டச்சிக்கல் என்கிறார். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் என்ன பொருள்? தமிழ் மக்களை முட்டாளாக்குகிற கேள்விகள் இவை. தமிழன்னையை அவமதிக்கிற கேள்விகள் இவை

சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் இன்றும் என்றும் நம் மரியாதைக்குரியவர்.

படிப்பகம்

www.padippakam.com



அவர் ஒரு தமிழ்க்களஞ்சியம். கலைஞர் இருக்கிற காலத்தில் தமிழ் கல்விமொழியாக வில்லை என்றால் பயிற்சி மொழியாகவில்லையென்றால் இந்த மரியாதைகளை இனி தமிழ் என்றுமே பெறமுடியாது என்று உணர்ச்சியோடு தமிழகம் முழுவதும் பேசியவர் சிலம்பொலியார். கலைஞர் மீது அவருக்கு என்னதான் நம்பிக்கை இருந்தாலும் தமிழ்ச் சான்றோர் கூட்டத்தை விட்டு வெளியேறுவதற்கு அவர் எப்படி துணிந்தார். ஒருவேளை சிலம்பொலியாரை வசப்படுத்துவதன் மூலம் தமிழறிஞர்கள் நடுவில் பிளவு ஏற்படுத்த முடியுமென்று கலைஞர் கருதியிருக்கலாம். ஆனால் என்ன நேர்ந்தது. சிலம்பொலியார் சிறுமைப்பட்டார் என்று சொல்வதற்கு எங்கள் மனம் துணியவில்லை. வணக்கத்திற்குரிய சிலம்பொலியார் மீண்டும் எங்களோடு சேர்ந்து கொள்ளத்தான் வேண்டும். கலைஞரைவிட தமிழ் பெருமைக்குரியது. இப்பொழுதேனும் கலைஞரைக் கட்டாயப்படுத்தி ஆட்சி மொழியென்றும், பயிற்சி மொழியென்றும் தமிழை ஆக்க முடியுமென்றால் கலைஞரை மரியாதைப்படுத்துகிறோம் என்பதுதான் பொருள்.

தமிழ்ச் சான்றோரோடு கல்வி அமைச்சரும் பண்பாட்டுத் துறை அமைச்சரும் நடத்திய உரையாடலின் போது சில உண்மைகள் வெளிவந்தன. மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவற்றில் ஒரு வகுப்பையேனும் தமிழில் நடத்துவது என்பது குறித்து ஒரு சிக்கல். மைய அரசின் தொழிற்கல்வி நிறுவனம் இதை ஒப்புக் கொள்ளவில்லை என்று எழுதியதாக கல்வியமைச்சரும் பிறரும் சொல்லி வந்ததில் உண்மையில்லை. கல்வித்துறை சார்பில் அனுப்பிய விண்ணப்பம் சரிவர அமையவில்லை. (ஏன் அமையவில்லை? எப்படி இந்தத் தவறு நேர முடியும்? கல்வியமைச்சர் பார்வையில் இந்த விண்ணப்பம் படவில்லையா? இப்படி நமக்கு ஐயங்கள். "விதியே தமிழச்சாதியை" என்றுதான் பொருமவேண்டி இருக்கிறது) தவறுகளைக் களைந்து புதிய விண்ணப்பத்தோடு கல்வித்துறை அலுவலர் ஒருவரை உடனடியாக டெல்லிக்கு அனுப்புகிறார்கள்.

இன்னொரு சிக்கல் தமிழில் படித்தவர்களுக்கு அரசப் பணியின் முன்னுரிமை இப்படி செய்யமுடியுமா? என்பது சட்டச்சிக்கல். தமிழகத்தில் ஆட்சிமொழி சட்டம் நிறைவேறி ஐம்பது ஆண்டுகள் ஆகிற நிலையில் இன்னும் இப்படியொரு சிக்கல். சட்டத்தை நிறைவேற்றி வைத்துக் கொள்வது அரங்கேற்றத்திற்காகவா? ஆட்சியாளர்களுக்கு வேறு என்ன தான் வேலை? என்றெல்லாம் கேள்வி கேட்டுப் பயனில்லை. இப்பொழுதுதான் சட்டச்சிக்கல் என்கிறார்கள். சிக்கலைத் தீர்க்கவேண்டியவர்கள் சொல்லுகிறார்கள். இப்படி ஒரு சட்டத்தை ஆந்திராவில் செயற்படுத்த முடியவில்லை. சட்டம் உண்டோ இல்லையோ கர்நாடகம் செயற்படுத்துகிறது. தமிழகத்தில் மட்டும் தாராள மனப்பான்மை. வேலைவாய்ப்பைத் தீர்மானிப்பது மொழியா? பணமா? என்றும் இப்பொழுது கேட்டு வைக்கலாம்.

இன்றும் ஒரு சிக்கல் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் அனைத்துப் பாடங்களும் தமிழில்தான் என்பதை ஆங்கிலப் பள்ளி நடத்துபவர்கள் ஏற்கமாட்டார்கள் என்பது மட்டுமல்ல, நீதிமன்றத்திற்கும் இவர்கள் செல்வார்கள். இப்படி அரசு தரப்பினர் கேள்வி எழுப்புகிறார்கள். இது மக்கள் நாயகம் நடைபெறுவதாக சொல்லிக்கொள்கிற

படிப்பகம்

www.padippakam.com



நாடு. நீதிமன்றத்திற்கு செல்லும் உரிமை அனைவருக்கும் உண்டு. இந்த உரிமையை நாம் மதிக்கத்தான் வேண்டும் (விஜயனை காலொடித்தது மாதிரி செய்ய முடியாது). எதிர் வழக்காடத்தான் வேண்டும். இந்த வழக்கில் தமிழ்ச் சான்றோர் பேரவையும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். எதிர் வழக்காடுவதிலிருந்து அரசும் தப்பமுடியாது. இறுதி முடிவு எப்படியும் அமையலாம்.

ஆங்கிலப் பள்ளிகளின் பெருக்கத்திற்கு யாரெல்லாம் துணை புரிந்தார்கள்? என்றெல்லாம் இப்பொழுது கேட்கிறோம். பள்ளிகளை தோற்றுவித்தவர்கள் மக்கள் நலத்தை விரும்பியவர்கள் அல்லர். ஆங்கிலத்தை விட இவர்களுக்கு பணம் மற்றும் அதிகாரம் முக்கியம். இவர்களை அனுமதித்த அதிகாரிகள் முதலியவர்களுக்கும் வேறு என்ன நோக்கம். இங்கு நடைபெறுவது மக்கள் நலத்திற்கு எதிரான சீர்கெட்ட முதலாளியம். இதன் உறுப்புக்களாகத்தான் இவர்கள் அனைவரும் செயற்படுகிறார்கள். இதற்குள்தான் கல்வியமைச்சரும் கலைஞரும் இருக்கிறார்கள். இவர்களனைவரும் சேர்ந்துதான் மக்கள் மத்தியில் ஆங்கில வெறியை திணித்தார்கள். பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பது போல பத்திரிக்கையாளர்களும் படித்தவர்களும் பேசுகிறார்கள். தங்கள் பிள்ளைகளை அமெரிக்காவிற்கு அனுப்பி அமெரிக்க வல்லரசை வலிமையுள்ளதாக்கி உலகின் மீது அமெரிக்க ஆதிக்கம் செலுத்தப்படுவதைத் தான் "இந்த அறிஞர்கள்" ஊக்குவிக்கிறார்கள். இவர்களை தேச துரோகிகள் என்று சொல்வதைத் தவிர வேறு சொல்வதற்கு என்ன இருக்கிறது.

நல்லவேளையாக தமிழ்ச் சான்றோர்கள் நீதிமன்றத்திற்கு அரசு செல்வதை வரவேற்றிருப்பதோடு ஆங்கிலப்பள்ளி வணிகத்திற்கு எதிராக போராடும் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார்கள். உண்ணாநோன்பு என்பது ஒரு முதல்கட்டம்தான். தமிழ்ச் சான்றோரை சற்றும் மதிக்காத அரசு இன்று சற்று அசைந்திருக்கிறது. கலைஞர் தந்திரசாலி. உறுதியளித்தபடி குழு ஒன்றை அமைத்திருக்கிறார்கள். குழுவின் முடிவுகள் ஒருமித்தமுடிவுகளாக இருந்தால் நல்லது. குழுவின் முடிவுகளையும் செயற்படுத்துவதில் மேலும் சிக்கல்கள் எழலாம். அடுத்தமுறை உண்ணாநோன்பு என்று அறிவிக்க மாட்டோம். வேறு வழி தேடுவோம் என்று தமிழ்ச் சான்றோர் அறிவித்துள்ளனர். மொழி குறித்த சிக்கல் என்பது அதன் அளவில் மட்டும் தீர்க்கக்கூடியதாக இல்லை. இது குறித்தும் தமிழ்ச் சான்றோர்கள் சிந்திக்க வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறோம். சீர்கெட்ட முதலாளிய சக்திகள் மக்கள் மத்தியில் தூவி இருக்கிற நச்சு விதைகள் முளைத்து மரங்களாகிக் கொண்டிருக்கிற இந்த வேளையில் தமிழை வாழ்விப்பதற்கான உயிர்ப்போராட்டத்தில் நாம் குதித்திருக்கிறோம். தொடங்கியிருப்பது ஒரு புனிதமான போராட்டம். இதில் வெற்றி பெருவதன் மூலம் தமிழை மட்டுமல்ல தமிழ் வரலாற்றையும் காப்பாற்ற புறப்பட்டுள்ளோம். எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று உரத்து முழங்கிய பாவேந்தர் மட்டுமல்ல. தொன்மையான தமிழின் சான்றோர் அனைவரும் நமக்கு துணை நிற்பர். 1938ல் தமிழுக்கான பேரெழுச்சி. 65ல் இன்னொரு பேரெழுச்சி. 99இல் இந்த எழுச்சி.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழனின் நோய்கள்

ம.இலெ. தங்கப்பா

## 3. நேரத்தை வீணாக்குதல்

தமிழனைப்போல் நேரத்தையும் மூச்சையும் வீணாக்குவோர் உலகில் வேறு யாரும் இல்லை. நமக்குக் காலத்தின் அருமை தெரியவில்லை. பயனற்ற செயல்களில் நம் ஆற்றலை வீணாக்குவதிலும் நமக்கு இணை நாமே.

சடங்குத் தனமான பேச்சு விழாக்கள் நம்மை மிக மிகப் பின்தள்ளிக் கொண்டு போய் நிறுத்தியுள்ளன. ஒரு கூட்டத்தில் ஒருவரைப் பேச அழைப்போமானால் அவரை மட்டும் பேசவிட்டு நாம் ஒதுங்கிக் கொள்ளலாமே. நாம் கேட்க விரும்பிய கருத்து அவருடையது மட்டும்தான். அப்படியிருக்க எதற்குச் சுற்றிச் சுற்றி மற்றவர்களின் வெற்றுரைகள், முகமன் பேச்சுகள், முன்னிலைச் சடங்குகள்? தலைவர் முன்னுரை முடிவுரை என்றும், வரவேற்புரை, நன்றியுரை என்றும் வெற்றுச் சடங்குகளில் காலத்தை வீணாக்கு கின்றோமே, இது தேவையா?

நம்மிடமிருக்கும் போலியான பண்பாட்டுணர்வு தான் இதற்கெல்லாம் காரணம் என்று எண்ணுகின்றேன். எல்லாரையும் நிறைவு செய்ய விரும்புகின்றோம். யாரைப் பற்றியும் நாலு புகழுரை சொல்ல நினைக்கின்றோம். ஒருவரைப் புகழ்ந்து ஓரிரு சொல் பேசாவிட்டாலோ, அல்லது மேடைக்கழைத்துப் பேசும்படி சொல்லாவிட்டாலோ அவர் நம்மீது வருத்தப்பட்டுக் கொள்வாரோ என்று அஞ்சுகிறோம். நம் ஆட்களும் அப்படித்தான் இருக்கின்றனர். படித்தவர்களிடம் கூடப் போதிய உள்ள முதிர்ச்சி காணப்படவில்லை. ஒன்றுக்கும் பற்றாத செய்தியில் கூட அவர்களின் பெயரை நாம் குறிப்பிடவில்லை என்றால் தங்களை மதிக்கவில்லை என்று மனத்தாங்கல் அடைகின்றனர்.

சரி, வெற்று மதிப்புக்காக ஒருவரை மேடையில் வந்து நான்கு சொல் பேசச் சொல்கின்றோம். அவராவது தம் சொந்த நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும். மிகச் சுருக்கமாக ஓரிரு சொற்களுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். நிறுத்திக் கொள்வாரா? மாட்டவே மாட்டாரே. தட்டுத் தடுமாறினாலும் சரி, தப்பும் தவறும் ஆனாலும் சரி ஒரு கால்மணி நேரத்தையாவது கொந்திக் குலைக்காமல் விட மாட்டாரே.

சொல்வதைச் சுருங்கச் சொல்ல வேண்டும் என்ற உணர்வோ, நமக்குப் பின் பலர் இருக்கின்றனரே அவர்கள் பேசவும் நேரம் கொடுக்க வேண்டும் என்ற ஓர்மையோ மேடை ஏறும் பலரிடம் இல்லவே இல்லை. சுருக்கமாக முடித்துக் கொள்வதாகக் கூறிக் கொண்டே நீட்டி வளைக்கின்றார்கள்.

மற்றொரு நோய் அரசியல் வாணரிடமிருந்து நம்மேல் தொற்றிக் கொண்டுள்ளது. இதுவும் நேரத்தை வீணாக்கும் நோயே. மேடை ஏறுபவர் வணக்கம் சொல்லித்தான் தொடங்க வேண்டுமா? சரி, "எல்லோருக்கும் வணக்கம்" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டால் போதுமே. தலைவர் உட்பட மேடையில் வீற்றிருப்பவர் அத்தனைப்

படிப்பகம்

www.padippakam.com



பேரையும், முன் வரிசையில் அமர்ந்திருக்கும் பெரிய மனிதர்களையும் ஒவ்வொருவராகப் பெயர் சூட்டி விளிக்கவேண்டும் என்று ஏதாவது சட்டமா? அப்படி ஒன்றும் இல்லையே? இது ஒரு சடங்காகிப் போய்விட்டது. எல்லாப் பெயர்களையும் சொல்லி முடிக்கவே ஐந்து மணித்துளிகள் வீணாகின்றன. நேரத்தை எப்படியெல்லாம் வீணாக்குகின்றோம்.

இனி, அந்த விழா, இந்த விழா என்று அச்சிட்டு இருபது பேரைப் பேச்சாளர் என்று போட்டுக் கொள்கின்றோம். ஆளுக்குப் பத்து மணித்துளி பேசினாலே மூன்று மணிநேரத்துக்கும் மேலாகி விடும். யாரும் பத்து மணித்துளியில் முடிக்கமாட்டார்களே. முதல் பேச்சாளர் வளவளவென்று அரைமணி நேரத்தை விழுங்கிவிடுவார். தலைவர் நடுவில் குறுக்கிட்டுப் பேச்சைச் சுருக்கிக் கொள்ளச் சொன்னால் சினம் வேறு வந்துவிடுகின்றது. பயனுள்ள பேச்சாக இருந்தால் சரி. ஒன்றுமே இல்லாத வெற்றுரைகளைத்தான் இவர்கள் நீட்டி முழக்கி நேரத்தைக் கொல்கிறார்கள். தமிழர் தங்களை முன்னேற்றிக் கொள்ள இப்படிப்பட்டவை எல்லாம் தடை என்று எண்ணுகின்றேன்.

## 4. காலம் தவறுதல்

தமிழராகிய நம்மிடம் பல உள்ளார்ந்த குறைகள் இருக்கின்றன. நம்மை முன்னேற்றிக் கொள்ள இக்குறைகள் தடையாக அமைகின்றன. நேரத்தை வீணாக்குதல் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். குறித்த நேரத்தில் நிகழ்ச்சியைத் தொடங்கி நடத்தும் பழக்கமும் நம்மிடம் இல்லை. காலந் தவறாமை என்ற பழக்கத்துக்கும் தமிழருக்கும் நெடுந்தொலைவு.

நிகழ்ச்சியை நடத்துபவர்கட்கும் சரி, பேச்சாளராகக் கலந்து கொள்பவர்க்கும் சரி, பார்வையாளர்களுக்கும் சரி கொஞ்சம்கூடக் கால உணர்வே இருப்பதில்லை. குறித்த நேரத்தில் ஒரு நிகழ்ச்சியைத் தொடங்காமையால் அல்லது பேசவேண்டியவரும் பார்வையாளரும் குறித்த நேரத்தில் வந்து சேராததால், ஏற்கெனவே வந்து காத்திருக்கும் எத்தனைப் பேர்களின் நேரம் வீணாகின்றது! நேரம் என்பது உழைப்பு; வேலை. ஒரு மணி நேரம் ஒருவர் வேலை செய்தால் ஆக்கப்பணி ஒன்று நடைபெறுகிறது; அல்லது ஆக்கப்பொருள் ஒன்று உருவாகிறது. இந்த ஆக்கம்தான் நேரத்தை மதிப்புடையதாக்குகின்றது. இருபத்தைந்து பேர் ஒருமணி நேரம் காத்திருக்க நேர்ந்தால் அந்த இருபத்தைந்து பேரின் நேரமும் வீணாகின்றது. ஆளுக்கொரு மணியாக இருபத்தைந்து மணி நேரங்கள் வீண்! அந்த இருபத்தைந்து மணிநேரத்தை ஆக்கப் பணியொன்றில், அல்லது ஆக்கப் பொருள் ஒன்று உருவாக்குவதில் செலவிட்டால் எவ்வளவு பயனை நாம் பெற முடியும்! இதனால்தான் இந்த ஆக்க நேரத்தைக் கணக்கிடுகையில் ஆட்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஆள் மணிகள் என்று கணக்கிடுகின்றார்கள். இரண்டாயிரம் பேர் கூடியுள்ள கூட்டத்தில் ஒரு மணி நேரம் கழிந்தால் கழிந்தது வெறும் ஒரு மணிநேரம் அன்று. இரண்டாயிரம் ஆள்மணிகள்!

நம் வெற்று விழா நாட்டங்களால், வெற்றுப் பேச்சு விருப்பங்களால், தேவையற்ற காத்திருப்புகளால், பயனற்ற சுற்றி வளைப்புகளால் வீணாகும் ஆள் மணிகளைக்

படிப்பகம்

www.padippakam.com



கணக்கிட்டுப் பாருங்கள்! ஆக்க வினைகட்குரிய நேரத்தை இப்படி வீணாக்குவதில் தமிழர்களைப்போல் இவ்வுலகத்தில் வேறு யாரேனும் இருப்பார்களா?

மற்றொன்றையும் நாம் இங்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும். மேலை நாட்டாரின் தன்மை வேறு. நம் நாட்டாரின் தன்மை வேறு. மேலை நாட்டினர் தங்கள் வேலையே முதன்மை எனக் கருதுவர். பயன் உள்ள செயல்களிலேயே ஈடுபடுவர். ஒரு கூட்டத்துக்கு அவர்கள் வருவதும் வராததும் அவர்களின் சொந்த விருப்பம். மற்றவர்களின் முகத்துக்காக அவர்கள் சும்மா வந்து கூட்டங்களில் குந்தியிருக்க மாட்டார்கள். அந்த நேரத்தில் எத்தனையோ ஆக்க வேலையைக் கவனிக்கலாமே என்று அவர்கள் போய்விடுவர். கூட்டத்துககு அழைத்தவர்களும் "அழைத்தோம், வரவில்லையே!" என்று ஊடல் கொள்ளமாட்டார்கள். நம்மவர்களின் உணர்வு முதிர்ச்சி அப்படி இல்லை. தாங்களாக விரும்பாவிட்டாலும் அழைத்தவர்களின் முகத்துக்காக வருபவர்களே மிகுதி. இதற்காக அவர்கள் எத்தனையோ வேலைகளை விட்டு விட்டு வந்திருப்பார்கள். சிலருக்கு இரவு 9 மணிக்கு இன்றியமையா வேலை இருக்கலாம். கூட்டம் 9 மணிக்கு முன் முடிந்துவிடும் என்று நம்பி அவர்கள் வந்திருப்பார்கள். இங்கேயே ஆறுமணிக் கூட்டம் ஏழுக்குத்தான் தொடங்கும். ஐந்து மணித்துளி வாழ்த்துரை வழங்கவேண்டிய ஒருவர் அரைமணி நேரம் ஆய்வுரை வழங்கத் தொடங்கி விடுவார். கடைசியில் பேசவேண்டிய சிறப்புப் பேச்சாளர் பேசத் தொடங்கையில் மணி 91/2 ஆகிவிடும்! கூட்டம் முடியப் பதினொன்றும் ஆகிவிடும்! எத்தனைப் பேர்களின் எத்தனை வேலைகள் தடைப்படுகின்றன!

மிகத் தேவையானால் மட்டுமே கூட்டங்கள் நடத்தவும், குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகளைத் தொடங்கவும், பேசுவோர் மிகச் சுருக்கமாகப் பேசவும், கூட்டத்துக்கு வராதவர்களைக் குற்றம் செய்தவர்கள் போல் கருதுவதைத் தவிர்க்கவும் நாம் கற்றுக் கொள்ளாதவரை ஆக்கவழிகளில் நாம் ஒருநாளும் முன்னேறப் போவதில்லை என்பது உறுதி.

---


## வரப்பெற்றோம் — நன்றி

உயிர்வேலி – சிறுகதைகள்
ஆசிரியர் : யுகசிற்பி
பக்கம் 160 விலை ரூ. 40/–

பூக்கள் விற்பனைக்கல்ல
ஆசிரியர் : மகேஸ்குமார்
பக்கம் 103 விலை ரூ. 23/–

கற்பூரப் பொம்மைகள் (நாவல்)
ஆசிரியர் : இராஜேஸ்குமார்
பக்கம் 96 விலை ரூ. 23/–

பூமி ரொம்பச் சிறுசு
ஆசிரியர் : பட்டுக்கோட்டை ராஜா
பக்கம் 104 விலை ரூ. 23/–

நெஞ்சில் ஆசை கோடி சுமந்து (நாவல்)
ஆசிரியர் : மகேஸ்குமார்
பக்கம் 97 விலை ரூ. 23/–

பாரதியாரும் அரவிந்தரும் (ஆய்வு)
முனைவர் ச. சுப்புரத்தினம்
பக்கம் 264 விலை ரூ. 55/–

சிவசக்தி நேஷனல் புத்தக வெளியீடு
81, கடைத்தெரு, நாகப்பட்டினம் – 611 001


படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் அமைப்புகளின் இன்றைய நிலை

தமிழகமெங்கும் சிறு சிறு தமிழ் அமைப்புகள், மன்றங்கள் வட்டார அளவிலும், நகர அளவிலும் இயங்கி வருகின்றன. தமிழின உரிமைகள் குறித்து அக்கறையுடன் சில சிற்றிதழ்கள் படைப்புகளை வெளியிட்டு வருகின்றன. ஒருபுறம் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் மறுபுறம் தேக்கத்துடன், உயிரோட்டமின்றி மரணத்தை நோக்கியே அமைப்புகளின், இதழ்களின் செயல்பாடுகள் இருந்து வருவது சிந்திக்க வேண்டிய முதற் செய்தியாகும். ஏன் இந்த நிலை? மாற்றத்தை விரும்பும் அமைப்புகளும், இதழ்களும் மாறிவரும் சமூக, அரசியல் பண்பாட்டு நிலைமைகளை புரிந்து கொண்டு மாறாமல் இருப்பது எதனால்? இந்த நிலைமையை நீடிக்க விடலாமா? என்பதே இன்றைய தமிழ் இயக்க ஆர்வலர்களின் முன் உள்ள கேள்வியாகும்.

## அகமும் : புறமும் :

மேற்கண்ட சிக்கல்கள் திடீரென்று தோன்றியதல்ல! அதேபோல உடனடியாக மாற்றிவிட முடியாததும் ஆகும்! ஆனால் உறுதியாக மாற்றியே தீரவேண்டிய அவலநிலையாகும். 20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அடிமைத்தனத்தின் உச்சியில் தமிழினம் நிற்கிறது. கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக நடந்து வந்த சாதி, மத ஆதிக்க எதிர்ப்புப் போராட்டமும், 70 ஆண்டுகளாக நடந்து வரும் சமூக நீதிக்கான போராட்டமும் தேங்கிக் கிடப்பதுடன் அதன் வரலாறும் அறுபட்டுக் கிடக்கிறது. தமிழ் அமைப்புகளின் பணிகள் வரலாற்று தொடர்ச்சிக்கானதாய் இல்லை! வரலாற்றின் சரி தவறுகளிலிருந்து பாடம் கற்று இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்லும் தலைமை நம்மிடம் இல்லாமல் இருப்பதே கேவலத்துக்குரியதாகும்.

இந்தச் சூழ்நிலையில் தமிழியக்கங்களின் செயல்பாடுகளோ சிறு சிறு துண்டறிக்கைகளை வெளியிடுவது, அறைக்கூட்டங்கள் நடத்துவது, ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களை நடத்துவது மட்டுமே செய்து வந்தன! அதுவும் ஒன்றிணைப்பு இல்லாமல், மக்கள் திரளை, மற்றும் அணியினரை பங்கு பெற வைக்காமல் இருந்ததால் வலுவிழந்துவிட்டன!

1997–98ல் நடந்த தென் மாவட்ட சாதிக் கலவரங்கள், கோவை கலவரங்கள் மற்றும் தமிழகமெங்கும் நடந்து வருகின்ற சூழல் மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு போராட்டங்களில் தமிழர் இயக்கங்கள் ஒதுங்கியே இருந்தன. பலம் இல்லை! பலம் இல்லை என்ற பல்லவியைத் தான் பாடிக் கொண்டிருந்தன. உண்மையில் இயக்கங்கள், அதன் முன்னணியினருடையேயும் நிலவிவரும் சில முரண்பாடுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளாதவரை மக்கள் பிரச்சினையில் தலையிட்டு பலம்பெறும் வாய்ப்பு தமிழர் அமைப்புகளுக்கு கிடையாது என்பதேயாகும்.

புறச்சூழலில், பொருளாதார, தொழில் நெருக்கடி, நுகர்வுப் பண்பாடு, மாறிவரும்

படிப்பகம்

www.padippakam.com



ச்னநாயக நிலைமைகளுக்கு ஏற்ப குடும்பத்தை உணர்வு பூர்வமாக கொள்கைக்கு ஏற்ப வழிநடத்தத் தவறுவது போன்ற சிக்கல்களில் தமிழுணர்வாளர்கள், இயக்கப் பொறுப்பாளர்கள் சிக்குண்டு உள்ளனர். இதனால் இயக்க முன்னணியினரின் அரசியல் வாழ்வு கேள்விக்குறியாகவே உள்ளது!

1. தலைவர்களின் செயல்பாடுகள், கொள்கை வேறு, வாழ்க்கை வேறு என்ற சூழ்நிலையில்தான் உள்ளது. (திராவிட, பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் மட்டுமல்ல சிறு சிறு இயக்கங்களின் தலைமையிலும் இதுதான் பிரச்சினை)

2. வாழ்க்கை முறைக்கு ஏற்ப கொள்கைகளை, வரலாற்றினை செயல்பாட்டினை திரித்துப் பேசுவதும், விளக்குவதும் செய்கின்றனர். கொள்கை வழியில் வாழ்க்கை முறையை; குடும்பத்தை அமைத்துக் கொள்ளத் தயாராய் இல்லை! அதனால் தொண்டர்களையும் தயார்படுத்தும் நிலையில் இல்லை.

3. இந்நிலைமைகளை சுட்டிக்காட்டி தமிழியக்கங்களில் அங்கம் வகித்த பல பேராசிரியர்கள், ஆசிரியர் பெருமக்கள், தமிழியக்க அமைப்பாளர்கள், பொது வாழ்க்கையில் இருந்து ஒதுங்கிக் கொள்வதே தம்மாலான பணி என்று அமைதியாகிவிட்டனர்! இதனால் இன்றைய அரசியல் அரங்கிற்கு அறிமுகமாகும் இளைஞர்களுக்கு இனத்தின் வரலாறு, இயக்கங்களின் வரலாறு, போராட்ட வரலாறு, அம்பேத்கார், பெரியார், போன்ற தலைவர்களின் வரலாறு, பொதுவுடைமை இயக்கங்களுக்கும் திராவிட இயக்கங்களுக்கும் நடந்த , நடக்கின்ற கொள்கைப் போராட்டம், ஆகியனவற்றை எடுத்துச் சொல்வதற்கு ஆட்கள் இல்லை! வழிகாட்டுதலும், படிப்பினையும் இல்லாததால் தமிழ், தமிழினம், தமிழ்நாடு குறித்த அக்கறை இல்லாத நிலையை நோக்கித் திரும்புவதற்கு மற்ற சமூகத்தாக்கங்கள் மேலோங்கியுள்ளன.

## இத்தடைகளைக் கடப்பது எப்படி?

மேற்சொன்ன அக, புறத் தடைகளைக் கடக்காமல் தமிழ் அமைப்புகள் முன்னேற முடியாது! மொழி, இனம் சார்ந்த கோரிக்கைகளில் மட்டுமே தமிழியக்கங்கள் முடங்கியுள்ளன. சமூகத்தின் அனைத்து தளத்திலும் நடைபெறும் போராட்டத்துக் தமிழ் அறிஞர்கள்; ஆர்வலர்கள், தமிழாசிரியர் பெருமக்கள் தமிழியக்கத்தின் முன்னோடிப் படையினர் கலந்து கொள்வதுடன் தலைமை தாங்கும் அளவிற்கு மாற வேண்டும்.

மொழியுணர்வு சமூக உணர்வின் ஓர் அங்கம்தான்! ஆகவே முழுமையான சமுதாய உணர்வு அல்ல! அவ்வவ் காலங்களில் எழும் சமுதாய சிக்கல்களில் உருவாகிவரும் சமூக இலட்சியங்களுடன் தத்தமது மொழியுணர்வைப் பிணைத்துக் கொள்ள வேண்டும். மொழி சார்ந்த மக்கள் படும் துயரங்களில் இரண்டறக் கலக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளை, கொடுமைகளை எதிர்த்து தமிழியக்கங்கள் தளம் புகாவிடில் மொழிஉணர்வு இருந்து என்ன பயன்?

தமிழினம் சாதியால் பிளவுபட்டு நிற்கும் போது தங்களது மொழியுணர்வு சாதியை,

படிப்பகம்

www.padippakam.com



சாதி ஆதிக்கத்தை அகற்றும், போராட்டத்திற்கு துணை நிற்காவிடில் பிழைப்புக்காகத் தான் மொழி, மொழியுணர்வு என்பது நிரூபனம் ஆகிறது அல்லவா! எனவே களத்தில் இறங்காதவரை உணர்வு என்பது எப்படி இருக்க முடியும்? தமிழுணர்வாளர்களின் குடும்பங்கள் சாதிய உணர்விலும், மதப்பிடிப்பிலும், சமூக மாற்றத்திற்குத் தடையாய் உள்ள பண்பிலும் மூழ்கிக் கிடக்கும்போது சமூகத் தளைகளை எதிர்த்து எப்படிப் போராட முன் வருவார்கள்?

இதுவே தமிழியக்கங்களின் இன்றைய தொய்வுகளுக்கு முதன்மையான காரணம்! இதனால் தமிழியக்கங்கள் வலுவான மக்களியக்கமாக மாறமுடிவது இல்லை! தங்கள் மீதான ஆதிக்கத்தை தகர்ந்தெறியும் போரில் பொருளாதார ரீதியில் வரும் பிரச்சினைகளைச் சந்திக்கத் துணையின்றி இவ்வியக்கங்கள் தடுமாறுகின்றன! அடுத்தடுத்து வரும் இளைஞர்கள் அரசால் தத்துவார்த்த ரீதியில் நின்று போராட உணர்வுடன் வழிகாட்டும் முன்னுதாரணங்கள் இல்லை. இத்தகைய தடைகளைக் களையவும், முன்னேறவும் இயக்க முன்னோடிகளிடையே ஒருங்கிணைப்பு தேவை! இலட்சியம் சார்ந்த குடும்ப நேசமும், அய்க்கியமும் தேவை! இயக்கப் பிரச்சினைகளைச் சமாளிக்க, தேவையான நிதியை திரட்டிக் கொள்ளவும் தொகுப்பு நிதியாக மாற்றிக் கொள்ளவும், தாராள மனம் உள்ள புதிய தமிழுணர்வாளர்கள் தேவை!

இதற்குத் தடையாய் உள்ள தமிழியக்கத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கும் சக்திகளைப் புறந்தள்ளவும், புதிய ஆற்றல்களை வளர்த்தெடுக்கவும் துணிந்த மனம் உள்ள ஆர்வலர்கள், செயல்வீரர்கள், எழுத்தாளர்கள், பிரச்சாரகர்கள், பின் புலமாக செயலாற்ற விரும்பும் ஆதரவாளர்கள் தேவை! இவர்கள் தான் 21ம் நூற்றாண்டில் தமிழியக்கங்களை போராட்டக் களத்தில் கொண்டு செல்லும் உந்துச் சக்திகளாக இருப்பார்கள்! இருக்கவும் வேண்டும்! இதில் யார் யார் எந்த அணியில் நிற்கிறோம். என்பதை முடிவுசெய்து கொள்ள வேண்டிய தேவை வந்துவிட்டது! முடிவு செய்வோம்! களம் காண்போம்!

- மா. இரவிராசன்

---

## வரப்பெற்றோம் — நன்றி

தாய்மண் (காவியம்)
பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்
கவியரசர் பதிப்பகம்
12, சாயி நகர் இணைப்பு, சென்னை – 92 விலை ரூ. 66/–

உண்மை உறங்கும் நேரம் (கவிதைகள்)
பொன்சிங், கனிமொழி பதிப்பகம்
717, பாலாஜி நகர், கோவை – 45 விலை ரூ. 20/–

தியானக் கவிதைகள்
கவிஞர் சின்னசாத்தன்
வி.எஸ். கீதாராணி, 4, எஸ்.வி.எல். நகர், சூலூர் – 641 402

படிப்பகம்

www.padippakam.com



# இங்கிலாந்தும் இனவாதமும்

1993ம் ஆண்டு கிழக்கு லண்டனிலுள்ள எல்த்தம் என்ற இடத்தில் ஒரு பேருந்து நிறுத்தத்தில் வைத்து ஸ்ரீவன் லோறன்ஸ் என்ற கறுப்பு இளைஞன் ஐந்து வெள்ளையின இளைஞர்களால் படு கொடூரமாகக் குத்திக் கொலை செய்யப்பட்டான்

அப்போது அரசாங்கத்திலிருந்த கொன்சர்வேட்டிவ் அரசு அதுபற்றிப் பெரிதாக ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்தக் கொலை வழக்கை விசாரித்த எல்த்தம் பகுதியைச் சேர்ந்த காவல்துறையினரும் ஏனோ தானோ என்று விசாரணையை இழுத்தடித்தார்கள். ஜனநாயகத்துக்கு வக்காலத்து வாங்கும் ஆங்கில அரசின் இந்த இரட்டை வேடம் ஆயிரக்கணக்கான கறுப்பு மக்களைக் கொதிக்கப் பண்ணியது. அடிக்கடி சிறையில் நடக்கும் கொலைகளில் (சிறையதிகாரிகளின் நடவடிக்கையால்) பரிதாபமாக அழிபவர்களில் பெரும்பாலானவர்கள் கறுப்புக் குற்றவாளிகளே.

இங்கிலாந்திலுள்ள மொத்த மக்கள் தொகையில் 6% வீதமானவர்கள் கறுப்பு ஆசிய மக்கள். ஆளும் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளை எடுத்துப் பார்த்தால் கறுப்புக் கைதிகளின் தொகை பெரும்பாலானதாக இருக்கும். மனநோயாளிகள் என்று சிறப்பு மருத்துவமுனைகளில் அடைக்கப்படுபவர்களிலும் கறுப்பு மக்களின் தொகை கூடுதலாக இருக்கிறது. காவல் துறையை எடுத்துப் பார்த்தால் 2% கறுப்பு மக்கள் கூட இல்லை.

வைத்தியர்களை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 30% வைத்தியர்கள் கறுப்பு அல்லது ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்கள் (பெரும்பாலும் இலங்கை, இந்தியா, பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள்) செவிலியர் தொழிலை எடுத்துக் கொண்டால் 28% கறுப்பு அல்லது ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்கள் (பெரும்பாலும் மேற்கிந்தியத் தீவைச்) சேர்ந்த பெண்களாகும். காவல் துறையை மட்டும் எப்போதும் ஆங்கிலேயர்கள் கைகளில் வைத்திருப்பதால் அவர்கள் கறுப்பு மக்களை அடக்கி வைப்பதில் மும்முரமாக இருக்கிறார்கள்.

ஸ்ரிலன் லோரன்ஸ் மரணத்திற்கான விசாரணையைத் தொழிற்கட்சி அரசாங்கம் அமைத்தலும் தொடங்கியது. அந்த விசாரணையிற் பல பரிந்துரைகள் தரப்பட்டன. எல்லா அரசு, தனிப்பட்ட நிறுவனங்களிலும் கறுப்பு – ஆசிய மக்களுக்குச் சமநிலை கொடுக்க வேண்டிய பொறுப்பு இப்போது அரசாங்கத்தால் அமுல் நடத்தப்பட மும்முரத் திட்டங்கள் நடக்கின்றன.

இதற்கெல்லாம் சாவு மணியடிப்பதுபோல் கடந்த சனிக்கிழமை (17.4.99) கறுப்பு மக்கள் பெரும்பாலும் வாழும் பிறிக்ஸன் (BRIXTON) என்ற பகுதியில் ஒரு குண்டு வெடித்தது. கிட்டத்தட்ட 39 கறுப்பு மக்கள் படுகாயங்களுக்குள்ளானார்கள். இருவரின் நிலை இன்னும் படுமோசமாக இருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் சொல்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



19.4.99ல் (கடந்த திங்கட்கிழமை) கொம்பாட் 18 (COMBAT 18) என்ற (வெள்ளை) குழுவினர் தாங்கள் தான் இந்தக் குண்டை வைத்ததாக காவல் துறைக்கு அறிவித்திருக்கிறார்கள். கொம்பாட் 18 என்பவர்கள் அதி தீவிரமான பிரிட்டிஷ் தேசிய கட்சியின் ஒரு சிறு பிரிவென்று (அல்லது பிரிந்து போனவர்கள்) என்று கருதப்படுகிறது.

இந்தச் செய்கைகள் எதை விளங்கப்படுத்துகின்றன என்றால் இங்கிலாந்து அரசு ஜனநாயகம் பற்றி தம்பட்டம் அடித்தாலும் அவர்களில் பெரும்பாலானவர்கள் தாங்கள் தான் உலகத்தில் சிறந்த இனம் என்பதை இன்னும் மனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

ஸ்ரீலன் லோடின்ஸின் தகப்பன் நெவிலும் தாய் டோரினும் ஆறு வருடமாகத் தங்கள் மகனைக் கொலை செய்த ஆங்கிலேயக் கொலைகாரர்களைச் சிறையிலடைக்கப் பாடுபடுகிறார்கள். தேவையான சாட்சிகள் (?) இல்லாதபடியால் அவர்களுக்குத் தண்டனை கிடைக்கவில்லை.

யூகோஸ்லாவேக்கியாவுக்குப் போய் செலபடோன் மிலோசோவிச்சுக்குப் பாடம் படிப்பிப்பவர்களுக்கு யார் பாடம் படிப்பிப்பது? நேட்டோ என்ற பெயரில் அமெரிக்காவுடன் சேர்ந்து இங்கிலாந்தும் கடந்த நான்கு வாரங்களாக யூகோஸ்லாவியாவைக் குண்டு போட்டுத் தகர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

யூகோஸ்லோவியத் தலைவன் செலபடோன் மிலோஸோவிச் அதிர்ந்து போகாதது அமெரிக்கரையும் ஆங்கிலேயரையும் மிகவும் கோபம் கொள்ள வைத்திருக்கிறது. ஆகாயப் படைகளால் வெல்ல முடியாத விடயத்தைத் தரைப் படைகள் மூலம் செய்ய யோசிக்கிறார்கள். 12,000 சிப்பாய்கள் (பாதிப்பேர் ஆங்கிலேயர் மற்றப் பகுதி அமெரிக்கர்) கோசோவோ பிரச்சினை தீர்க்க நேட்டோவின் சார்பில் அனுப்பப்படப் போகிறார்கள். தரைப்படை போனதும் பிரச்சினை என்ன திருப்பத்தை எடுக்கப் போகிறதோ தெரியாது.

உலகத்துப் பிரச்சினைகளுக்கெல்லாம் "ஜனநாயக" முறையில் தீர்வு காணத் தன் படைகளை அனுப்பும் அமெரிக்க நாட்டில் எரிக் ஹரிஸ் (18 வயது) டிலன் க்லப்போல்ட் (17 வயது) என்ற இரு இளைஞர்கள் கொலராடோ என்ற இடத்தில் தாங்கள் படித்த பாடசாலையிலுள்ள 17 சகமாணவர்களைக் கொலை செய்திருக்கிறார்கள் 19.4.99) மேலும் 20 மாணவர்கள் மிகவும் அபாயமான நிலையிலிருக்கிறார்கள். இதுதான் அமெரிக்கா ஜனநாயகத்தின் பிரதிபலிப்பு.

உலகத்திலேயே மிகவும் கொலைகள் நடக்கும் நாடு அமெரிக்கா. 8 வயது தொடக்கம் குழந்தைகள் துப்பாக்கி எடுத்து அனுபவப்படுகிறார்கள். அடுத்த நாடுகளில் ஜனநாயகம், சமத்துவம், மனிதநேயம் புகட்ட முதல் அமெரிக்காவும் இங்கிலாந்தும் தங்கள் சொந்த வீடுகளைச் சரியாக வைப்பார்களா என்பது நீண்ட நாளைய கேள்வியாகும்.

– சி. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

படிப்பகம்

www.padippakam.com



# புதிய தமிழிலக்கியம்

## சிதைவுகள் — சினுவா ஆச்சிபி

ஆப்பிரிக்க மண்ணிலிருந்து மகத்தான படைப்பாய் உலக வாசகர்களை ஈர்த்துக் கொண்ட சினுவா ஆச்சிபியின் 'சிதைவுகள்' ஆப்பிரிக்க கலாச்சார, பண்பாட்டு நெருக்கடியை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட புதினம். சினுவா ஆச்சிபி சொல்வதைப் போல் வாழ்க்கை சார்ந்த நெருக்கடிகளைச் சித்தரிப்பதும் சகமனிதனுக்கு அந்த வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை அளிப்பதும்தான் சிதைவுகள் புதினத்தில் நாம் கண்டுகொள்ளக்கூடிய தரிசனமாய் அமைகிறது.

உலக வாசகர்களால் கொண்டாடப்படும் ஒரு படைப்பு, மனித சுபாவத்தின் அப்பழுக்கற்ற ஆளுமையை சித்தரிப்பதோடு நின்றுவிடாமல் வருங்காலத்திற்கான செயல்வடிவ யுக்திகளை முன்வைக்கின்றது. ஆப்பிரிக்க மக்களின் வாழ்க்கையென்பது அவர்களின் பாரம்பரிய நிகழ்வுகளின் நம்பிக்கைகளைத் தழுவி நிற்கிறது. சர்வாதிகார ஆட்சிக்கும் ராணுவ அத்துமீறலுக்கும் உள்ளான அவர்களின் இயல்பு வாழ்க்கை காலனிய ஆட்சியின்கீழ் கோரமான அனுபவங்களை கொண்டிருக்கிறது. அந்நிய ஆட்சியின் கீழ் படாதபாடுபட்ட மக்கள் தங்கள் மிக உன்னதமான பழக்கவழக்கங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்காக செய்த தியாகம் என்பது நாம் நினைக்குமளவிற்கு மிகச்சிறிய விடயமல்ல. அது பரவசமும் அழுகையும் பற்கடிப்பும் நிறைந்த மானுடப் போராட்டம். மேற்கத்திய மதிப்பீடுகளால் இன்று தமிழனுக்கு நேர்ந்துள்ள நெருக்கடியைப் போன்றதுதான், நைஜீரியா மக்களின் மிகப் பழமைவாய்ந்த மரபுகளுக்கு ஏற்பட்ட நெருக்கடியும். நெருக்கடியான சூழலில் அடக்குமுறைக்கெதிராக தைரியமாக எழுதப்படும் படைப்பு மண்ணை நேசிக்கிற, மக்களை நேசிக்கிற வாசகர்களுக்கு ஓர் உன்னத உத்வேக ஆளுமையை பரிசளிக்கின்றன. அப்படிப்பட்ட எழுத்தின் மொத்த சாராம்சம்தான் 'சிதைவுகள்'.

மூன்று பகுதிகளாய் பிரிக்கப்பட்டு ஒக்கொங்வோ என்ற பாத்திரத்தின் வழியே மிக மென்மையாய் நகரும் கதை சொல்லல், இடையிடையே தெறித்துவிழும் அந்த மக்களின் பேச்சு வழக்கின் இனிமையோடு நமக்குள் நுழையும்போது ஆச்சிபியின் மனிதர்கள் கலையையும் இலக்கியத்தையும் எந்த அளவுக்கு தங்களின் சுவாசத்தோடு கலந்து வைத்திருக்கிறார்கள் என்பதை மிகத்துல்லியமாய் நம்மால் கண்டு கொள்ளமுடியும்.

சமயத்தின் அடிவேரில் காணக்கிடைக்கின்ற ஆதிக்க உணர்வு வெகுகாலமாய் பாதுகாத்து வைத்த நம்பிக்கைகளை கொச்சைப்படுத்தும் நோக்கில் ஊடுருவும்போது யதார்த்த மனிதர்களின் அகத்திற்குள்ளும், புறத்திற்குள்ளும், இயல்பாய் ஏற்படும் கோபம் பீறிட்டெழுந்து பிரவாகமாய் முன்னுக்குத் தள்ளப்படுகிறது. இந்தக் கோபம் நியாயமானதும்கூட. அடித்தளத்து மக்களின் சொந்த சொத்து என்பது முந்தைய வழித்தோன்றலின் வழியே பின்பற்றப்படும் சடங்குகளும் நம்பிக்கைகளும்தான். போற்றிப் பாதுகாத்து வைத்து கலாச்சாரத்தின் செழித்த மரபுகளை எந்தச் சோகமுமின்றி சிதைத்துவிட சமயப் பணியாளர்கள் கிறித்தவ மதத்தின் கோட்பாடுகளை உமோஃபியா

படிப்பகம்

www.padippakam.com



- னும் ஒக்கொங்வோவின் கிராமத்துக்குள் கட்டாயமாகத் திணிக்கிறார்கள். ஆர்ப்பாட்டத்தோடும் தங்கள் வாழ்வியலின், பழக்கவழக்கங்களோடும் பரவசப்பட்டிருந்த உமோபிஃயா கிராமம் கதறித் துடிக்கும் போதுதான் மனித வரலாற்றின் அழிக்கமுடியாத பாரம்பரிய கோபுரம் எவ்வளவு உயரமானது என்று விளங்கிக் கொள்ள முடிகிறது. மேற்கத்திய கலை இலக்கிய மதிப்பீடுகளிலிருந்து மாறுபட்ட கோணத்தில் அதன் ஆதிக்க சமய நெறிகளை பின் தள்ளுவதற்கான போராட்ட வடிவத்தைப் புரிந்து கொள்கிறோம்.

ஒக்கொங்வோவிற்கு ஏற்பட்ட மிக இக்கட்டன சூழலென்பது அவன் நேசத்திற்கினிய மூத்தமகன் நாவோயை கிறித்தவ மதத்தில் இணைந்துவிட்டதுதான் அவனால் இனி ஓர் உன்னதமான நைஜீரிய கலாச்சாரத்தை மிதிக்கத்தான் முடியும் என விளங்கிக் கொண்டதால்தான் ஒக்கொங்வோவிற்கு ஏற்பட்ட கோபம் தீவிரமடைகிறது. தன் அய்ந்து மகன்களையும் அருகே அழைத்து, "உங்கள் அண்ணன் செய்த அருவருப்பான காரியத்தை நீங்கள் அனைவரும் பார்த்தீர்கள். இப்போ அவன் என் மகனுமல்ல, உங்கள் அண்ணனுமல்ல. எனது குலத்தில் தன் தலையை நிமிர்த்திக் கொண்டு செல்லும் என் மக்களில் ஒரு ஆண் மகனைத்தான் என் மகன் என்று அழைப்பேன். உங்களால் எவனாவது பெண்ணாக இருக்கவிரும்பினால் நான் உயிருடன் இருக்கும்போதே நாவோயெயைப் பின்பற்றி இப்போதே போய்விடுங்கள் அப்போதுதான் அவனை நான் சபிக்க முடியும். நான் இறந்தபிறகு எனக்கு எதிராக நீங்கள் திரும்பினால் நான் திரும்பவும் வந்து உங்களின் கழுத்தை முறித்து விடுவேன்" இந்த வார்த்தைகள் ஒரு கதாபாத்திரத்தின் வார்த்தைகளாய் நாம் கருதமுடியவில்லை. ஓர் இனம் தன்னை அழிக்காமல் பாதுகாத்துக் கொள்ள மிக நேர்மையான முறையில் செய்யப்படும் உன்னதமான புரட்சி என்றே இதை நாம் அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தன் பண்பாட்டுக்கு நேருகிற அபாயமான தருணத்தில் ஒரு கொலையாளியாய் மாறக்கூடிய மிக ஆழமான கலாச்சார நேசம் மிகுந்த ஒக்கொங்வோ உயிரை மாய்த்துக்கொண்டு தொங்கும்போது சிதைவுகள் என்ற படைப்பை ஒரு கதையின் வாசிப்பு அனுபவத்திலிருந்து நேரடியான பார்வை மிகுந்த காட்சியமைப்பாய் விரித்து வைக்கிறார் அந்த சினுவா ஆச்சிபி. அந்த ஒன்றுதான் படைப்பின் வெற்றியும், மானுட வரலாற்றின் வெற்றியும். ஒக்கொங்வோ கதையளவில் செத்துப்போனாலும் அவரின் பாத்திரத்தொனி "ஒருவன் என் குடிசைக்குள் வந்து மலம் கழித்தால் நான் என்ன செய்வது? என் கண்களை மூடுவதா? இல்லை ஒரு தடியை எடுத்து அவன் மண்டையை உடைக்கவேணும். அதைத்தான் ஒரு ஆண்மகன் செய்வான் . . . போன்ற ஏராளமான நடைமுறை உண்மைகளைக் கற்றுக்கொண்டு நமக்குள்ளும் ஒக்கொங்வோயை வாழ வைக்கிறோம்."

மொழிபெயர்ப்பாளர் திரு. என்.கே. மகாலிங்கம் மற்றும் வெளியிட்ட காலம் வெளியீட்டாளர்கள் அனைவரும் நல்ல பணியைத் திறம்பட செய்திருக்கிறார்கள் அவர்கள் நன்றிக்குரியவர்கள்.

பக்கம் 181 விலை 75

- பாலை நிலவன்

படிப்பகம்

www.padippakam.com



# தமிழியக்கங்கள்

## சேக்கிழார் விழா

கோவையில் கோவை வானொலி நிலையமும் சேக்கிழார் மையமும் ஏப்ரல் 24, 25 ஆகிய நாட்களில் சேக்கிழார் விழா நடத்தினர். பெரியபுராணம் குறித்து அண்மைக் காலத்தில் விரிவான ஆய்வு நூல்களை அறிஞர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் எழுதி வருகிறார். பெரியபுராணத்தைப் பக்தி இலக்கியம் என்று போற்றுவதோடு மக்கள் நலம் நாடும் இலக்கியம் என்ற மதிப்பீட்டையும் அண்மைக் காலத்தில் சிலர் முன்வைக்கின்றனர். சாதிகளுக்கிடையில் சமரசம் போற்றியவர் சேக்கிழார் என்ற கருத்து, மக்கள் நல நாட்டம் கருதியது என்று இவர்கள் உரைக்கின்றனர். அப்பர் உழவாரப் படைகொண்டு தொண்டு செய்தார். சிலர் தண்ணீர் பந்தல் வைத்தனர். பலர் கோவிலுக்கான பணிகள் செய்தனர். சிவனடியார்களுக்கு எல்லாவற்றையும் சிவத்தொண்டர் தந்தனர். குருவைப் போற்றினர். மக்கள் நலம் நாடி சிவபெருமான் அருள் புரிந்தார். இவ்வகைச் செயற்பாடுகளில் சைவசமய ஆக்கம் மற்றும் பக்தி தெரிகிறதே அன்றி இவற்றை மக்கள் நலம் எனச் சொல்வது சிந்தனைக்குரியது.

தாழ்த்தப்பட்டவர்களையும் சிவபெருமானின் அடியவர் என்பதற்காகவே சைவப்பெருமக்கள் மதித்தனர். பிள்ளைக்கறி சமைத்தது, சிவனடியார்க்கு மனைவியை தந்தது, மனைவியின் மூக்கை அரிந்தது போன்ற செயல்களை மனநோயாளிகளின் செயல்கள் என்றே இன்று கருத முடியும். இவ்வகைச் செயல்களை இன்று பக்தி என்று பாராட்ட முடியாது. மெய்ப்பொருள்நாயனார், கண்ணப்ப நாயனார், பூசலார் நாயனார், சாக்கியர் போன்றவர் கதைகளை இன்றும் நாம் போற்றமுடியும். மனுநீதிச்சோழன் கதை தமிழர் நெறிபோற்றும் கதை. சைவ சமய ஆக்கத்திற்கும் முற்பட்ட கதைகள் பலவற்றை பக்தி ரசம் கலந்து சைவ சமயத்தின் ஆக்கத்திற்கு நம்பியாண்டார் நம்பி முதல் சேக்கிழார் வரை பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

சைவத்தின் தோற்றம், வளர்ச்சி முதலியவை தமிழ் மக்களின் வளர்ச்சியோடு தொடர்புடையவை. மேஜர் கதிர்மகாதேவன் அவர்கள் குறிப்பிட்டபடி தொன்மங்கள் (புராணங்கள்) தமிழ் மக்களின் வாழ்வோடும் வளர்ச்சியோடும் பின்னிப் பிணைந்தவை. 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர்' என்பதனுள் பக்தி மட்டுமல்ல சமதர்மத்திற்கான உணர்வும் அடங்கியுள்ளது. இன்று சைவத்தை / பக்தியை முன்னிறுத்தி சமதரும உணர்வை அமுக்கமுடியாது. சாதிகளுக்கிடையில் சமரசம் என்பது கூட இன்று தேவையில்லை. சாதிகள் நமக்கு வேண்டாம். சேக்கிழாருக்கு சமதருமம் அன்று தேவையில்லை. இன்று நமக்கு சமதருமம் இல்லாமல் முடியாது. பக்திப் பெருக்கோடு மட்டும் இன்று பெரியபுராணத்தைப் படித்துவிடவா முடியும்? பணிவோடு கேட்டுக் கொள்கிறோம். பெரியவர்கள் சிந்திக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# திருப்பூர் – தாய்த்தமிழ்ப்பள்ளி ஆண்டுவிழா

நம்மாழ்வார் அண்ணாச்சியோடு (23.4.99) அன்று திருப்பூர் தாய்த்தமிழ்ப் பள்ளியை நெருங்கியபோது மாலை மணி 4.30 இருக்கும். அப்பள்ளி குறித்த பெருமிதங்களையும், எதிர்பார்ப்புக்களையும் எனக்குள்ளே பதியமிட்ட தினமணி பொங்கல் மலர்ப் பக்கங்கள் மனதுள் விரிந்தன. பள்ளி நிகழ்வுகளை ஒலிபரப்பிய ஒலிபெருக்கி அதற்கான அதிர்வுகளை இன்னும் தூண்ட, முகப்பை நெருங்குகையில் ஒரு வித்தியாசமான வரவேற்பு!

கட்–அவுட், தோரணங்கள், '. . . . அவர்களே வருக! வருக' – என்பதெல்லாம் இன்றி, பார்த்தசாரதி படம் – நவீன முறையில்! – குதிரைகள் பூட்டிய தேரில் சாரதியாகக் குழந்தை அமர, பார்த்தன் இடத்திலே குழந்தையோடு தாய்! உச்சியில் பறந்த கொடியில் தாய்த்தமிழ்ப் பள்ளியின் சின்னம். 4,5 என்ற இலக்கமிட்ட நடுகற்களுக்கு இடையே தேர் ஓடிக் கொண்டிருக்கிற பாவனை. 4ம் ஆண்டு கடந்து 5ம் ஆண்டை இப்பள்ளி நெருங்குவதான விளக்கத்தை அங்கே பெற முடிந்தது. விழா மேடையை நோக்கித் திரும்ப! . . காலியிடம் ஏதுமின்றி எங்கும் மக்கள்; அந்த மஞ்சள் வெயிலையும் பொருட்படுத்தாது. அந்தத் தெருவோரக் கடைகள் எங்கும் சின்னச் சின்ன விளம்பர அட்டைகள் – தாய்த்தமிழின் மேன்மை, பெண்கல்வி, விளையாட்டு முறையில் கற்றல் என்பன குறித்த கவிநய முழக்கங்களோடு!

எளிமையும் சிறப்புமாய் விரிந்த மேடை! நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்ற க.ரா. முத்துசாமி ஓடி வந்து நம்மாழ்வாரைத் தழுவிக் கொண்டார்; கை கூப்பினார். முன்னிலையாளர்களும் சிறப்பு விருந்தினர்களும் ஒருபுறத்தே அமர்ந்து நிகழ்வுகளைக் காண, அவர்களையடுத்துக் கைகட்டி நின்று பார்த்தபோது, பல குரல்கள் ஒருங்கிணைந்து, "அண்ணா கைகட்டாதீங்க . . " பதற்றத்தோடு கைகளைப் பிரித்தேன். விழா முடியும் வரைக்கும் – பழகிய அந்தச் செயல் – அவர்களை என்பால் பலமுறை சொல்ல வைத்தது. அந்தக் குரல்களுக்குச் சொந்தக்காரக் குழந்தைகள் பள்ளிச் சீருடையில்! எளிமை, தூய்மை நிறைந்த அவ்வாடை தவிரக் கழுத்தில் சுருக்கிடும் டை இல்லாதது காண மிகுந்த மகிழ்ச்சி. அஃதேபோன்று ஆசிரியைகள் – அல்ல – அக்காக்களும் சீருடையில்! சுற்றிச் சுற்றி வண்ணத்துப் பூச்சிகளாய் அவர்கள் பணியாற்றிய அழகு மிகுசிறப்பு!

மரபுவழி, வரவேற்பு, ஆண்டறிக்கை வாசித்தல் இடம் பெற்றன. ஆண்டறிக்கை, இப்பள்ளிக்கு வந்து பார்வையிட்டோர் கருத்துக்களின் பட்டியலாக இருந்தது. பேரூர் ஆதீன இளையபட்டம் மருதாசல அடிகளார் தமிழ்க்கல்வியின் இன்றியமையாமை, இது

படிப்பகம்

www.padippakam.com



குறித்த அரசின் மௌனநிலை பற்றி விமர்சித்தார். தோழர் தியாகு, கோவை ஞானி ஆகியோரின் உரைகள் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கி இருந்தன. நம்மாழ்வார் உள்ளிட்ட தமிழறிஞர்களின் வாழ்த்துரைகள் மிகக் குறைந்த பொழுதில் அரங்கேற, மறுபடியும் குழந்தைகளின் கலை நிகழ்வுகள், அறிவுத்திறன் நிகழ்வுகள் . . .! சமுதாய – மொழி, இன பண்பாட்டுக் கூறுகளை உயர்த்திப் பிடித்தபடி! அறிவியல், சூழற்காப்பு, தம் பகுதி ஒட்டிய வரலாறு, நிலவியல் முதலிய துறைகளில் அவர்களது கல்வி செழுமை கொண்டிருப்பதை அறியமுடிந்தது. உச்சரிப்பு வெகுசுத்தம்!

இனிவருங்காலங்களில் ஆங்கிலம் ஒரு மொழியாக ஏற்றுப் படிக்கிறபோது ஆங்கிலப் பள்ளி மாணவர்களை விடவும், ஆங்கிலப் புலமை மிக்கவர்களாகத் தாங்கள் வளர முடியும் என்கிற நம்பிக்கையை அவர்கள் தெரிவித்தார்கள். அமைப்பாளர் களிடத்தில் அதற்கான உறுதி தெரிந்தது.

மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய செய்தி – ஏனைய பள்ளிகளில், ஆபாசமிக்க திரைப்பாடல்களை ஒலிபரப்பி அதற்கேற்ப ஆடும் (தமிழண்ணல் நோக்கில் வலிப்பு நடனங்கள்) வக்கிரங்களின்றி பாரதி, பாரதிதாசன் பாடல்கள், நாட்டார் பாடல்களுக்கு ஏற்ப, அபிநயித்து பரதமும், நாட்டார் நடனமுமாக அரங்கேறியமை சிறப்பு.

அப்பள்ளியில் பயிலும் அனைத்து குழந்தைகளும் அரங்கேறியிருக்கின்றனர் என்ற செய்தியை நிறைவுப் போதில் குறிப்பிட்டார். பள்ளித் தாளாளர் கு.ந. தங்கராசு, வாடகை இடத்தில் நடக்கும் இப்பள்ளிக்கான சொந்த இடம் வாங்க வேண்டி நிதி கேட்ட போது உடனே 500 முதல் 5,000 வரையாக மக்கள் நிதி தந்த காட்சி மக்களின் பேராதரவிற்குச் சாட்சியானது.

புற்றீசல் எனப் பெருகி வரும் ஆங்கிலப் பள்ளிகளுக்கு இடையே அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஊற்றெனக் கிளம்பி இருக்கும் இப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு அது மனவலி தரும். தலைமை தாங்கி நடத்தும் போராட்டத்திற்கான வலிமையையும், பயிற்சியையும் இவர்கள் இங்கே பெறுகிறார்கள் என்று சொல்லமுடியும்.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூட்டம் – பள்ளிக்குழந்தைகளின் பெற்றோர் – மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை ஏராளமான கலை நிகழ்ச்சிகள் – சிறுவர் சிறுமியரின் ஆடல்கள், பாடல்கள் – துல்லியமான கேள்விகளும், பதில்களும் – பிசிறில்லாத நடனங்கள் – குழந்தைகளின் கொண்டாட்டங்கள் – கொட்டிப் பெய்யும் தமிழ் மழை – எல்லோர் நெஞ்சையும் குளிர்வித்தது – தமிழ் பயிர் தழைப்பதை யாராலும் தடுத்துவிட முடியாது – கண்கொள்ளாக் காட்சிகள் – என்றும் மறக்கமுடியாத காட்சிகள் – வணக்கத்திற்குரியவர்கள், பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள்.

– சேதுபதி

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்நாடு சமூக அறிவர் அரங்கம்

## மூன்றாவது சந்திப்பு — "கற்பகச் சோலை"

தமிழ்நாடு சமூக அறிவர் அரங்கத்தின் மூன்றாவது சந்திப்பு புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டம் சேந்தன்குடி தங்கசாமி அவர்களின் 'கற்பகச் சோலை'ப் பண்ணையில் காலை 10 மணிக்குத் தொடங்கியது. 12 ஏக்கர் பரப்பளவில் 170 வகை மரங்கள் கொண்ட இயற்கையான காட்டை உருவாக்கியுள்ளார் தங்கசாமி. தொடக்கத்தில் தேக்குமரத் தங்கசாமி என்று பெயரெடுத்தவர், காலப்போக்கில் உயிரினப் பன்முகத்தின் ஆற்றலை உணர்ந்து பல வகை மரங்களையும் கொண்ட கற்பகச் சோலையாக மாற்றியுள்ளார்.

தங்கசாமி தனது திருமண நாளின்போது நட்ட 'மாமரம்' பண்ணையின் நடுவில் நெடிதுயர்ந்து நிற்கிறது. அதன் கீழேதான் அறிவர் அரங்கக் கலந்துரையாடல் நடைபெற்றது. "இயற்கைச் சூழலைப் பேணுவதற்கு ஏராளமான மரங்கள் தேவை. நாட்டின் மூன்றிலொரு பகுதி காடாக இருக்க வேண்டும். மனிதன் மானத்தோடு வாழ மரங்களை வளர்க்க வேண்டும். ஐம்பூதங்களையும் சமப்படுத்தும் ஆற்றல் மரங்களுக்கு உண்டு", என்று காடு வளர்ப்பின் அவசியத்தைக் கூறினார் தங்கசாமி. கலந்துரையாடல் தொடங்குவதற்கு முன்னரே நெல்லி மரக் கன்றுகள் 5 நடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். அவரது வீட்டின் முகப்பில் "ஏர்ப்பின்னது உலகம்" என்று எழுதியுள்ளார். பக்கச் சுவர்களில் மரங்களின் அவசியத்தையும், விவசாயிகளின் மேன்மையைப் பற்றியும் பொன்மொழிகளை எழுதி வைத்துள்ளார். மனிதன் தன்னைத்தானே அறிந்து கொள்வதே முதல்படி என்பதை எல்லோருக்கும் நினைவுபடுத்த, தனது வீட்டில் பூசை அறை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். அங்கு ஆளுயரக் கண்ணாடி மட்டும் நிற்கிறது. அதில் "உன்னையே நீ அறி" என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. இப்படி தங்கசாமி என்னும் சூழல் ஆர்வலரின் 'கற்பகச் சோலை' நம்மைக் கவர்வதில் வியப்பில்லை. ஏராளமான குருவி, காக்கை, அணில், மயில், வாத்து, மாடு இவைகளின் சத்தங்களுக்கிடையே தங்கசாமி அவர்களின் காடு வளர்ப்பு அனுபவத்தோடு அறிவர் அரங்க நிகழ்ச்சி தொடங்கியது. வந்திருந்த அனைவரையும் மகிழ்ச்சியோடு வரவேற்றார் தங்கசாமி.

4.4.99 அன்று பல்லடம் தாய்த்தமிழ்ப் பள்ளியில் அறிவர் அரங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் நடைபெற்றது. ஆட்சிக் குழுவில் விவாதிக்கப்பட்ட கருத்துகளின் அறிக்கை அரங்கில் வாசிக்கப்பட்டது. வேளாண்மை, சுற்றுச்சூழல், மருத்துவம், கல்வி மற்றும் உள்ளாட்சி இவற்றின் செயல்பாடுகளுக்கான முக்கிய களமாக அறிவர் அரங்கம் ஆட்சிக்குழு முடிவு செய்தது.

வாசிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் அரங்கம் விவாதத்தைத் தொடர்ந்தது. கற்பகச் சோலையை முதல்முறையாகப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்த சிலரும் அங்கு வந்திருந்தனர். அதில் பேரா.மு.க. சுப்பிரமணியம் கற்பகச் சோலை என்பது ஒரு

படிப்பகம்

www.padippakam.com



சூழலியலைப் பாதுகாப்பதற்கான நல்ல மாதிரி. இதைப்போல மாதிரிகள், தமிழகத்தில் பரவலாக இருக்க வேண்டுமென வலியுறுத்தினார். நண்பர்கள், நிறுவனங்கள், சூழலியலாளர்கள் என நாம் அனைவரும் வாய்ப்புள்ள இடங்களில் இத்தகைய மாதிரிப் பண்ணைகளை அமைக்கவேண்டும் என்றார்.

தொடர்ந்து சூழலியலைப் பாதுகாப்பதற்கான நமது செயல்திட்டம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது பற்றிய விவாதம் தொடர்ந்தது. அப்போது நம்மாழ்வார் தெரிவித்த கருத்துக்கள் எத்தகைய பணி நம்முன் உள்ளது. அதனை எந்த முறையில் நாம் சாதிக்கலாம் என்று பேசினார்.

ஜாஸ் என்றொரு ஆஸ்திரேலியக்காரர் ஆரோவில்லில் இருக்கிறார். 1968ல் இருந்து அவர் அங்கு இருக்கிறார். அவரை யார் பார்க்கப் போனாலும், கையில் விதை கொண்டு வந்திருக்கிறீர்களா? என்று கேட்பார். எந்த விதையாக இருந்தாலும் கைப்பிடி அளவு கொண்டு வர வேண்டுமென்பார். அது தானியமாகவோ மரவிதையாகவோ, மூலிகை விதைகளாகவோ இருக்கலாம். அந்த விதைகளின் தன்மைகளைக் கேட்டுக் குறித்துக் கொள்கிறார். விதைகளை வாங்கி வைத்துவிட்டு அங்குள்ள விதைக் களங்சியத்தைச் சுற்றிக் காட்டுவார். அதிலுள்ள ஏதேனும் விதைகளைக் கொஞ்சம் எடுத்துக் கொள்ளச் சொல்வார்.

விதைக் களஞ்சியத்தை நல்ல முறையில் அங்கு பராமரித்து வருகின்றனர். அட்டவணைப்படுத்தி, உள்ளூர் பெயர், தாவரவியல் பெயர், தன்மை இவற்றை குறித்து வைக்கின்றனர். கோடை காலத்தில் எந்தெந்த இடத்தில் மரவிதைகள் கிடைக்கிறது என்று தெரிந்து வைத்துக் கொள்கிறார். மரக்காணம் தொடங்கி ஆரோவில் வரையுள்ள பகுதியின் வரைபடம் வரைந்து, அதில் எங்கெங்கு என்னென்ன மரங்கள் இருக்கின்றன. அவை எந்த நேரம் பூப்பூக்கும். எப்பொழுது விதைகிடைக்கும் என்ற விவரங்களை குறித்து வைக்கிறார். விதை சேகரிப்பதில் விருப்பமுடைய ஏழெட்டு பேர்களை உடன் அழைத்துக் கொண்டு விதை சேகரிக்கிறார். அவ்வாறு விதை சேகரிக்கும்போதே, அங்குள்ள எல்லாத் தாவர வகைகளைப் பற்றியும் அறிந்து குறித்துக் கொள்வார்.

அங்கு மூலிகைத் தோட்டமொன்றும் ஏற்படுத்தியுள்ளனர். இரண்டு நாட்டு மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு மாதமும் 5ம் தேதி அந்தப் பகுதியிலுள்ள நாட்டு வைத்தியர்கள் யாரும் அங்கு வரலாம். அங்கு உணவு கொடுப்பார்கள். பின்பு, அவர் தான் என்னென்ன நோய்க்கு என்னென்ன மூலிகைகளைப் பயன்படுத்துகிறேன் என்பது பற்றி அந்த மருத்துவர் பேச வேண்டும்.

நாம் நாடு முழுவதும் செய்யக்கூடிய பணி என்ன? என்று யோசிக்கும்போது ஜாஸ் செய்துள்ள பணிகளை நாடு முழுக்க அவரவர் பகுதிக்கேற்ப விரிப்பது தேவையாக உள்ளது. இவ்வாறு நம்மாழ்வார் கூறினார்.

தொடர்ந்து புதுக்கோட்டை திருவரங்குளம் பகுதியில் மூலிகை வளத்தைப் பராமரித்து வருகிற ஆன்விக்டோரியா அவர்கள் பேசினார்கள். இவர், அல்லோபதி மருத்துவராகப் பணிபுரிந்து, மூலிகைகளின் சிறப்பை உணர்ந்து, இன்று முழுக்க மூலிகை மருத்துவப் பணிகளைச் செய்துகொண்டுள்ளார். மக்கள் விவசாயப் பண்ணை

படிப்பகம்

www.padippakam.com



என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனை உயர்த்தும் பணிகளை செயல்படுத்தி வருகிறார்.

புதுக்கோட்டை காடுகள் இன்று அழிந்துவிட்டன. அழிவதற்கு முன்பு இருந்த காடுகள் போன்ற மீண்டும் அமைக்கும் முயற்சியில், மக்கள் விவசாயப் பண்ணையில் 400 வகைத் தாவர வகைகளைப் பாதுகாத்து வருகிறோம். 11 ஏக்கர் பரப்பளவில் காடாக உருவாக்கி வருகிறோம். நம்மிடம் இல்லாத மூலிகை, தாவர வகைகளை அருகிலுள்ள கோயில் காடுகளிலிருந்து விதைகள் சேகரித்து, பாதுகாத்து பராமரித்து வருகிறோம். ஆராவில்லில் செய்வது போன்றே நாங்களும் வேலை செய்கிறோம் என்றார் ஆன் விக்டோரியா.

தமிழ்நாடு முழுவதும் பரவலாக இயற்கை வேளாண் பண்ணைகள் இருக்கின்றன. சில பண்ணைகள் ஆதார மையங்களாகவே உள்ளன. சில திட்டமிட்ட பணிகளைச் செய்தோமென்றால் அவை ஆதாரங்களாக மாறிவிடும். இதற்கென பயிற்சியாளர் குழு ஒன்று நமக்கு வேண்டும். பயிற்சி என்பது எப்படி இருக்க வேண்டுமென அரங்கில் விவாதம் நடைபெற்றது.

**நம்மாழ்வார் :** இதுவரை நாம் பயிற்சி கொடுப்பது என்றால் 20, 30 பேர்களை ஓரிடத்தில் ஒரு வாரம், பத்து நாட்கள் என்று தங்கவைத்து செய்தோம். அதில் நாம் நினைத்த பலன் கிட்டவில்லை. அதற்குப்பதிலாக, ஒரு பயிற்சியாளர் குழுவை நாம் ஏற்படுத்த வேண்டும். அவர்களுடன் இருந்து சிலர் கற்க வேண்டும். அதன் நோக்கம் ஐந்து அல்லது ஆறு பேரை நாம் ஓரிடத்திற்கு அனுப்பினால் அவர்கள் அந்த இடத்தை மாற்றியமைத்து விட்டு வரவேண்டும் என்பதாக இருக்க வேண்டும். எனவே பயிற்சியளிப்பதன் அணுகுமுறையை நாம் அடிப்படையில் மாற்றி அமைக்க வேண்டும். இன்று நம் கையில் நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன.

பயிற்சி என்பதில் செய்திகளை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். தத்துவத்தைப் புரிந்து கொண்ட பின்னால்தான் வெளிச்சம், தெளிவு பிறக்கும். எனக்கே, படித்தவன் என்ற கோட்டை கழட்டிப் போட நாளானது. அதற்கே பயிற்சி தேவைப்பட்டது.

உதாரணத்திற்கு நிலத்தை வளப்படுத்துவது பற்றி எடுத்துக் கொள்வோம். மக்கள் பேசும்போது 'எரு' என்றுதான் சொல்கின்றனர். ஆனால், வெளிநாட்டிலிருந்து வந்த நிபுணர்கள், உள்நாட்டு நிபுணர்கள் சொன்னது உரம். விவசாயி தன்னிடமுள்ள எல்லா எருவையும் நிலத்தில் போட்டுவிட்டு நிலத்தை உழுது வளமாக்கிவிட்டு அந்த நிலத்தில் எதை வேண்டுமானாலும் பயிர் செய்வார்.

விவசாயி எரு இட்டது நிலத்துக்கு, ஆனால் அதிகாரி சொல்வது பயிருக்கு. வாழைக்கு என்றால் ஒரு விகிதம், நெல்லுக்கு வேறொரு விகிதம், பருத்திக்கு இன்னொரு விகிதம். பயிரைப் பற்றி அதிகாரி பேச ஆரம்பித்த பின்னர் நிலத்தைப் பற்றிக் கவலைப்படவேயில்லை. இறக்குமதியான தொழில் நுட்பம் நமது நிலத்தில் உப்பைக் கொட்டி கெட்டித் தரையாக்கிவிட்டது. திரும்பத்திரும்ப சில விகிதங்களைப்

படிப்பகம்

www.padippakam.com



போடச் சொன்னார்கள். போதவில்லையென்றால் நுண்ணுயிர்களைப் போடு என்றனர். பின்னர் சிங் சல்பேட் போடச் சொன்னார்கள். ஆனால் உண்மையில் நடந்ததென்ன? நிலத்தில் தாதுக்கள் இல்லாமல் இல்லை. திரும்பத்திரும்ப உப்பைக் கொட்டியதால் பூமியில் இருந்த மூலகங்கள் பயிருக்கு கிடைக்க முடியாத பருவத்துக்கு போய்விட்டது. அவ்வளவுதான். கிடைக்கக்கூடிய பருவத்துக்கு அதை மாற்றுவது நுண்ணுயிர்கள்தான்.

எனவே, பூமியில் இருக்க வேண்டியது உயிர்களே. உப்பையும் நஞ்சையும் கொட்டி பூமியிலுள்ள உயிர்களைக் கொன்ற பின்னர் பயிருக்கு உரம் போடு என்கிறார். எனவே, நாம் என்ன செய்ய வேண்டும். இன்றைக்குள்ள அறிவியல் அடிப்படையை, பாரம்பரிய நுட்பங்களோடு இணைத்து நாம் நுண்ணுயிர்களுக்கு உணவு அளிக்கிறோம். இப்படி புரிந்து கொண்டு வேலை செய்வதுதான் பயிற்சி பெற்றவர் செய்யும் வேலை. இப்படித் தத்துவத்தையும் புரிந்து கொண்டவர்களைத்தான் நாம் உருவாக்கவேண்டும்.

இன்னொரு நுட்பத்தைப் பார்ப்போம். மரத்துக்கு மிக அருகில் இருக்கும் வேர்கள் அதைத் தாங்குகிறவை. அடிமரத்தை ஒட்டி இருக்கிற மண் கெட்டியாக இருக்கவேண்டும். அப்போதுதான் அது உறுதியாகக் காலூன்றி நிற்க முடியும். எவ்வளவு உறுதியாக இருக்கிறதோ அவ்வளவு காய்களையும், கிளைகளையும் மரம் தாங்கும். நாம் மரத்தைச் சுற்றி தண்ணீர் விட்டு நைப்பாக்கிவிட்டால், மென்மையாக்கிவிட்டால், மரம் ஆடிக்கொண்டே உறுதியற்று இருக்கும். காய்களையெல்லாம் உதிர்த்துவிடும். எனவே அடிமரத்தைச் சுற்றிலும் கெட்டியான மண்ணைப் போட்டு ஒரு புனலைக் கவிழ்த்து வைத்தால் எப்படி இருக்கும் அதைப்போல இருக்க வேண்டும். மரத்தின் தண்ணீர் குடிக்கும் வேர் எட்டி இருக்கிறது. உணவு வயிறுக்குத்தான் என்றாலும் அதனை நாம் வாயில்தானே போடுகிறோம். கற்பகச் சோலையையே எடுத்துக் கொள்வோம். பக்கத்திலுள்ள நிலத்தைவிட இங்கு நன்றாக இருக்கிறது. ஆனால், இந்த நிலத்தில் செய்வதற்கு இன்னும் நிறைய இருக்கிறது. இதைத்தான் பயிற்சி என்று சொல்கிறோம். எனவே அத்தகைய பயிற்சிக்கு ஈடுபாடு உள்ளவர்களைச் சேர்க்க வேண்டும்.

பயிற்சி யாருக்குத் தேவை? எந்தெந்த பண்ணைகளில் என்னென்ன ஆதாரங்கள் இருக்கின்றன? எந்தெந்தப் பண்ணைகளின் என்னென்ன வகையான வேலைகள் செய்ய வேண்டும்? என்பதைப் பட்டியலிட வேண்டும்.

**மு.க. சுப்பிரமணியன் :** நமது வேலைகளை இயக்கப்படுத்த வேண்டும். வேளாண்மையில் பயிற்சியாளர்களை உருவாக்குவது பற்றி இங்கு பேசப்பட்டது. அது ஒரு இயக்கம். மருத்துவம் இருக்கிறது. அதிலும் பயிற்சி கொடுக்கவேண்டும். பல்லடத்தில் முன்பே பயிற்சியளிக்கிறார்கள். இன்னும் பல இடங்களில் அதற்கான வாய்ப்பு இருக்கிறது. புதிய புதிய இளைஞர்கள் பயிற்சி பெற்று வருவார்கள். இதுவும் ஒரு இயக்கம். அதேபோல் தாய்தமிழ்ப் பள்ளிகள் என்பது இயக்கமாகிவிட்டது. தியாகு மிகவும் அடக்கமான மனிதர். எனவே, அவர் பணி என்று சொல்கிறார். நான் அதை இயக்கம் என்கிறேன். தற்போது 20 பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளோடு நமது மருத்துவப் பணிகள் இணைய வேண்டும். வேளாண்மைப் பணிகள் இணைய வேண்டும். நமக்கு முன் தோன்றியுள்ள இயக்கம் தாய்த்தமிழ்ப் பள்ளிகள். அது ஒரு உதாரண இயக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



கற்பகச் சோலைப் பண்ணை ஒரு மாதிரிக் காடு. ஆனால் இது இயக்கமாகவில்லை. இயக்கமாக்கும் வேலையில் நம்மாழ்வார் தொடர்ந்து விடாப்பிடியாகப் பணியாற்றுகிறார்.

தங்கசாமி : தமிழக அளவில் ஒரே அறிவர் அரங்கம் என்று தொடங்கியுள்ளோம். இதன் அடுத்த கட்டமாக மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி ஒரு அறிவர் அரங்கம் இருக்க வேண்டும். அந்த அரங்கம் அந்தப் பகுதி சிக்கல்களைப் பற்றி விவாதித்து என்ன முடிவுகளை எடுக்க வேண்டுமென முடிவு செய்யவேண்டும். தமிழ்நாடு அளவில் இருக்கும் அறிவர் அரங்கம் மையக் குழுவாக இருக்கட்டும். அது அதிகாரம் செலுத்தும் குழுவாக இல்லாமல், ஒருங்கிணைப்பு செய்யும் குழுவாக இருக்க வேண்டும். நமக்கென ஒரு கலைக்குழுவும் வேண்டும்.

தங்கசாமியின் கருத்து விவாதிக்கப்பட்டது. மாவட்ட அளவில் அரங்கம் உருவாகும் வரை மையக் குழு இரண்டு மாதம் ஒருமுறை கூடுவது தொடரட்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

கண. குறிஞ்சி : நமது செயல்கள் பரவலாக நாடு முழுவதும் சென்று கொண்டிருக்கிறது. நம்மிடையே தகவல் தொடர்புக்கென செய்திப் பத்திரிக்கை அவசியம் வேண்டும். பத்திரிக்கைதான் ஒரு இயக்கத்தை நெறிப்படுத்தும், ஒருங்கிணைக்கும் வலுப்படுத்தும்.

இராதா LEAD : ஆதாரங்கள் நம்மிடையே நிறைய இருக்கின்றன. கடந்த காலங்களில் தோன்றிய இயக்கங்கள் என்னவாயின. நிறைய நிதி திரட்டினார்கள். செய்திப் பத்திரிக்கை கொண்டு வந்தனர். ஆனால் எல்லாம் என்னவாயிற்று? சரியான முறையில் செயல்பட தற்போது இருப்பதைவிட மாறுபட்ட அணுகுமுறை இருக்கிறதா என நாம் யோசிக்க வேண்டும். நாம் ஏன் உடனடியாக செயலில் இறங்க வேண்டும்? இன்னும் பலமுறை விவாதித்து நமக்குள் தெளிவான முடிவுக்கு வந்த பின்னர் செயலில் இறங்கலாம். தாய்த் தமிழ்ப்பள்ளிகளைப் பற்றி நாம் நிறைய கேள்விப்படுகிறோம். இன்னும் கூடுதலாகத் தெரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் உழைக்கும் சிறுவர்கள் மத்தியில் பணிபுரிந்து வருகிறோம். நாங்கள் கூட ஒரு பள்ளி தமிழில் நடத்துகிறோம். ஆனால் பெற்றோர் ஆங்கிலம் சொல்லித் தரவில்லையே என்று கவலைப்படுகிறார்கள்.

இந்தக் கட்டத்தில் பல்லடம் திருவள்ளுவர் கல்விப்பணி அறக்கட்டளை முத்துக் குமரன் தாய்த் தமிழ்ப்பள்ளி நடைமுறைகளை விளக்கினார். குழந்தைகள் கல்வி கற்பதுடன் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளவும் செய்கின்றன. இந்தப் போக்கு பெற்றோர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்றார். ஆன் விக்டோரியா, இராதா இருவரும் தாய்த்தமிழ்ப் பள்ளிக்காக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நடைமுறைகளைக் கேட்டறிந்தார்கள்.

வணிக நோக்கில் பள்ளி தொடங்குவோரைப் புறம் தள்ளி உண்மை ஆர்வலர்களை இனம்கண்டு ஒப்புதலும் ஒத்துழைப்பும் நல்க வேண்டியுள்ளதை வலியுறுத்தினார் முத்துக்குமரன். வணிக மயமாவதை ஒட்டி நம்மாழ்வார் பேசினார்.

படிப்பகம்

www.padippakam.com



வணிகம் என்று வரும்போது, விற்பவன் தன்னிடமுள்ள பொருளை இன்னொருவன் தலையில் கட்டியாக வேண்டும். முதல் செயலாக அவர்கள் செய்வது தன்னிடமுள்ள பொருட்களையெல்லாம் பெரிசுபடுத்துவதும் பொருளை வாங்குபவனிடம் முன்பே இருப்பவற்றையெல்லாம் இழிவுபடுத்துவதும் நடக்கிறது. இத்தகைய கலாச்சார வேலையில் முதலில் இறங்குகின்றனர். அப்படித்தான் பிரிட்டிஷ்காரன் இந்தியாவில் வந்து இறங்கினான். இங்குள்ள மாடு மோசம். இவர்களிடமுள்ள வேளாண்மை மோசம். இவர்களிடமுள்ள கலப்பை மோசம். இங்கிலாந்தில் இருந்து கலப்பை கொண்டுவர வேண்டும். இங்கிலாந்திலிருந்து வேளாண் அதிகாரி வரவேண்டும். இங்கிலாந்திலிருந்து பசுமாடு வரவேண்டும். இதுதான் வெள்ளையன் காலத்தில் நடந்தது. சுதந்திரம் பெற்றதாகக் கருதப்படும் காலத்தின் பின்னரும் இதை மாற்றிக் கொள்ளவில்லை. அதே பாதையில் வேகமாகச் சென்று எல்லா மேல் நாட்டுக்காரர்களின் பொருட்களையும் மேலானதாகவும் நம் நாட்டுக்குள் இருப்பதெல்லாம் தாழ்வானதாகவும் எண்ணும் கலாச்சாரநிலை நிலவுகிறது. எனவே, நகரத்தில் உற்பத்தி செய்யப்படுவதெல்லாம் கிராமத்தில் இறக்கிவிட வேண்டுமென நினைக்கிறான். முதல் வேலை நம்மை இழிவுபடுத்தும் நம்மைச் சுற்றியுள்ள பொருட்களை இழிவுபடுத்துவது. அவனிடமிருந்த எல்லாவற்றையும் பெரிதுபடுத்துவது.

இயற்கை என்பது நமது நாட்டில் மிகவும் செழிப்பானது. நாம் 12 மாதமும் வெளியில் தூங்கமுடியும். அங்கு மூன்று மாதம்கூட வெயில் இல்லை. எங்கும் ஒரே பனி. கண்ணாடிக் கதவு போட்டுக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இருக்கவேண்டும். கால்வரைக்கும் துணிபோட்டு போர்த்த வேண்டும். சூரியனே கிடையாது. இயற்கையைப் பற்றிய அறிவே அங்கு கிடையாது. இயற்கைகையைப் பற்றிப் படிப்பதென்றால்கூட இங்குதான் வரவேண்டும். ஆனாலும் நம்மிடம் இருப்பதெல்லாம் மோசம் என்றான் வெள்ளையன். நாமும் ஒப்புக்கொண்டு, அவனிடம் இருந்ததையெல்லாம் உயர்வென்று எண்ணி வாங்கினோம். அங்குதான் ஏமாந்து போனோம்.

**ஜெயச்சந்திரன் (ஊராட்சி மன்றத் தலைவர், அரியன்னூர்):** கிராம சபைகளைக் கூட்டுவது பற்றி அரசாங்கம் பேசுகிறது. கிராம சபைக் கூட்டத்தைக் கூட்டுவது, தேதி அறிவிப்பது, நிகழ்ச்சி நிரல் வரையும் அதிகாரமும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமே இருக்கிறது. எந்த அதிகாரமுமே இல்லாத சபையை கிராம சபை என்கின்றனர்.

கிராம சபைக் கூட்டமென்பதை வழக்கமாக நாங்கள் இரவில் கூட்டுவோம். அமாவாசையன்று யாரும் வேலைக்குப் போகமாட்டார்கள். அன்று கூட்டினால் எல்லோரும் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும். ஆட்சித் தலைவர் முடிவு செய்து ஜீப்களில் அதிகாரிகளைத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருப்பார்கள். நாங்கள் 2 மணிக்கெல்லாம் தொலைநகலில் (FAX) தகவல் அனுப்பிடிகவேண்டும். நான் அவர்கள் 10 மணிக்குக் கூட்டச் சொன்னால் 3 மணிக்கு வருமாறு அழைப்பிதழ் அனுப்புவேன். ஏனென்று அதிகாரிகள் விளக்கம் கேட்டனர். கிராமத்தின் வசதியைப் பொறுத்துத்தான் நேரம் முடிவு செய்வேன். எப்போது சபையைக் கூட்ட வேண்டும் என்பதை நாங்கள்தான் முடிவு செய்வோம். அதற்கு எங்களுக்கு முழு உரிமை இருக்கிறது என்மீது, என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் நீங்கள் எடுக்கலாம் என்றேன்.

படிப்பகம்

www.padippakam.com



இன்னும் சில கிராமங்களில் கிராம சபை நல்ல முறையில் இருக்கிறது. பெரும்பாலான கிராமங்களில் கட்சி ஆளுமை கேடு கெட்ட முறையில் அதிகரித்து விட்டது. கிராம சபையை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துக் கூட்டும் நிலைமை இருக்கக்கூடாது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் கிராமக் குடியாட்சி பற்றி முறையாக விவாதிக்கப்படவில்லை. பெயரளவுக்கு சட்டத்தில் இருக்கிறது.

கிராம சபை என்பது முழு அதிகாரம் கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும். உத்திரமேரூர், எங்களுடைய ஊருக்கு அருகில்தான் இருக்கிறது. சோழன் காலத்தில் தேர்தல் மூலம் கிராம சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனாலும், அன்று கிராமங்களுக்கு இருந்த அதிகாரம் இன்று இல்லை.

மே 1–ஆம் நாள் கிராம சபையைக் கூட்ட வேண்டுமென்கின்றனர். அன்று விடுமுறை நாள். அன்றைய தினம் ஊரில் திருவிழா கூட இருக்கலாம். ஆனாலும் சபையை ஒத்தி வைக்கும் அதிகாரம் ஊராட்சித் தலைவருக்கு இல்லை. வருடத்தில் 4 முறை சபை கூட்டப்பட வேண்டும். (மே 1, அக்டோபர் 2, ஆகஸ்டு 15, ஜனவரி 26) தேதியை கிராம சபைத் தலைவர் முடிவு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் பார்வைக்கு அனுப்பலாம். அதுதான் கிராம குடியாட்சி. ஆனால் தேதியை, முடிவு செய்யும் அதிகாரமே இவருக்கில்லை.

கிராமத்திலுள்ள ஏரி, குளம், கண்மாய் போன்றவற்றை அரசாங்கச் சொத்து என்று சொல்கின்றனர். அது கிராமத்தின் சொத்து என்பது யாருக்கும் தெரிவதில்லை. நான் இரண்டு சட்டங்களிலும் பஞ்சாயத்து தலைவராக இருந்திருக்கிறேன். 1958ம் ஆண்டு சட்டத்தின்படி இருந்த பஞ்சாயத்து அமைப்பிலும் தலைவர். 1994 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படியும் இன்று தலைவராக இருக்கிறேன். 29 வகை அதிகாரங்கள் பஞ்சாயத்துகளுக்கு இருப்பதாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த அதிகாரமும் பஞ்சாயத்துகளுக்கு இல்லை.

**நம்மாழ்வார் :** ஜனநாயக அமைப்பில் அதிகாரிக்கு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் இருக்கக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கவேண்டும்.

அரங்கத்தில் கலந்துகொண்ட அனைவரும் தமது கருத்துக்களை பேசினர். பட்டுக்கோட்டை வழக்குரைஞர் திரு. பிரகாசம் தஞ்சை மாவட்டத்தில் ஒரு குழுவைக் கூட்டுவதற்கான வாய்ப்பு இருப்பதைக் குறிப்பிட்டார். செயல்திட்டங்கள் எப்படியிருக்க வேண்டும் என்பது பற்றிய பேச்சு வந்தபோது நம்மிடமுள்ள ஆதாரங்களைப் பட்டியலிடுவது முதல்பணி என முடிவு செய்யப்பட்டது. அதன்படி தமிழகமெங்கும்உள்ள இயற்கை வேளாண் பண்ணைகள், மரபு முறை மருத்துவம் தொடர்பான தகவல்கள், கல்வியில் தாய்த்தமிழ்ப்பள்ளி, சூழல் நிலவரங்கள் என எல்லாவற்றைப் பற்றியும் நம்மிடமுள்ள ஆதாரங்களைப் பட்டியலிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

**குமரவேல் :** பட்டியல் என்ன வகைப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதை வரையறை செய்ய, நாம் ஒரு கேள்வித்தாளைத் தயார் செய்து எல்லோருக்கும் அனுப்பலாம்.

படிப்பகம்

www.padippakam.com



விவரங்களைப் பட்டியலிடும்போதே விடுபட்ட விவரங்கள் நமக்குத் தெரியவரும். கூடுதல் விவரங்களையும் குறிப்பிட்ட பகுதிகளுக்கான விவரங்களையும் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அனுப்பலாம். இவ்வாறு செய்வது நமது பணியை விரைந்து முடிக்கவும், ஆதாரங்களைப் பட்டியலிடவும் பயன்படும். அவரவர் அனுப்பட்டும் என்பதில் காலதாமதத்திற்கு இட்டுச் செல்லும் ஆபத்து இருக்கிறது. இதுதான் நடைமுறை யாகவுள்ளது.

இந்தக் கருத்துக்கு பரவலாக ஆதரவும், எதிர்ப்பும் இருந்தது. நாம் ஏன் குறிப்பிட்ட வினாத்தாளைக் கொடுத்து குறுக்கவேண்டும். அவரவர் விருப்பப்படி, இருக்கின்ற ஆதாரங்களைப் பட்டியலிடட்டும். அதன்பிறகு அவற்றை ஒருங்கிணைத்து வரிசைப்படுத்தி வரைபடம் ஆக்கிக் கொள்ளலாம். ஆதாரங்கள் பற்றிய விவரங்களை மே 19ம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

அமர்வின் முக்கிய நிகழ்ச்சியாக ஆட்சிக் குழு விரிவாக்கப் பெற்றது.

## ஆட்சிக்குழு உறுப்பினர்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | கோ. நம்மாழ்வார் | அரெய்சு | தமிழ்நாடு |
| 2. | வி. ஜீவானந்தம் | தமிழகப் பசுமை இயக்கம் | ஈரோடு |
| 3. | எஸ்.என். நாகராசன் | மார்க்சீய அறிஞர் | வேலூர் |
| 4. | ஞானி | தமிழறிஞர் | கோவை |
| 5. | மு.க. சுப்பிரமணியம் | பேராசிரியர் | ஈரோடு |
| 6. | ந. முத்துக்குமரன் | திருவள்ளுவர் தாய்த்தமிழ் கல்விப்பணி | பல்லடம் |
| 7. | ஆர். செல்வம் | தமிழகப் பசுமை இயக்கம் | ஈரோடு |
| 8. | த. குருசாமி | ஃபியர்ன் | மதுரை |
| 9. | ந. இராதா | லீடு | திருவரங்கம் |
| 10. | ஆ. ஞானப்பிரகாசம் | வள்ளலார் சங்கம் | புதுக்கோட்டை |
| 11. | ஆர். ஜெயச்சந்திரன் | ஊராட்சி மன்றத் தலைவர் அரியனூர் | மதுராந்தகம் |
| 12. | மு. குமரவேல் | தமிழ் மைந்தர் மன்றம் | நடையனேரி |
| 13. | டேனியல் குமரன் | சூழலியலாளர் | புதுக்கோட்டை |
| 14. | ம. ஆன் விக்டோரியா | இயற்கை அறக்கட்டளை | புதுக்கோட்டை |
| 15. | கே. பிரகாசம் | வழக்கறிஞர் | பட்டுக்கோட்டை |
| 16. | மா. இரவிராசன் | சூழலியலாளர் | கோவை |

அறிவர் அரங்கத்தின் அடுத்த சந்திப்பு LEAD நிறுவனத்தில் (செட்டிகுளம், திருச்சி) நடைபெறும். தேதி 19.6.99 அதற்கு முன்னதாக ஆட்சிக்குழு கூட்டம் மே 19ம் தேதி புதுக்கோட்டை சுகவனத்தில் நடைபெறும். முடிவாக ஆனாலும் முக்கியமாகச் சொல்லப்பட வேண்டியது ஒன்று உண்டு. அமர்வுக்கு வந்திருந்த ஒவ்வொருவரும் ஒரு மரக்கன்று நடுவதற்கு கற்பக சோலைத் தங்கசாமி ஏற்பாடு செய்யத் தவறவில்லை.

தொகுப்பு : மு. குமரவேல்

படிப்பகம்

www.padippakam.com



# மலட்டு விதையுடன் படையெடுக்கும் மான்சான்டோ

தொடர்ச்சி

## டெர்மினேட்டார் எனும் மலட்டுவிதை :

இதை விவசாயத்தில் ஒரு 'ஹைட்ரஜன் குண்டு' என்கிறார் சிலிநாட்டு ஆய்வாளர் கமீலா மாண்ட்ரிசினோஸ். 1998 மார்ச் 8 அன்று, மான்சான்டோவின் சகோதர நிறுவனம் டெல்டா–பைன், அமெரிக்க விவசாயத் துறையுடன் மேற்கொண்ட ஆய்வின் பலனாக உயிரியல் தொழில் நுட்ப முறையில் தாவர மரபணு கட்டுப்பாட்டு பருத்தி விதையை உருவாக்கி வடிஉரிமை பதிவு செய்துள்ளோம் என அறிவித்தது,

இதன்மூலம் வளர்ந்து உருவாகும் பருத்தி விதை மீண்டும் முளைக்காமல் தன்னையே மலடாக்கிக் கொள்ளும் 'திறன்' கொண்டது. இந்த உயிரியல் தொழில் நுட்பத்தால் தான் உருவாக்கும் எந்தப் பயிரின விதைக்கும் வடிவுரிமை உண்டு என வலை விரிக்கிறது மாண்சான்டோ.

காலம்காலமாக தமது நிலத்தின் விளைச்சலிலிருந்து விதைகளைப் பெற்றுவந்த மூன்றாவது உலக நாடுகளின் ஏழை விவசாயிகளின் பாரம்பரிய உரிமை கம்பெனிகளின் விற்பனைப் பொருளாகும். பருத்தி, கோதுமை, தக்காளி, மிளகு, சோளம் ஆகியவற்றிலும் இதன் உரிமை விரியும்போது விவசாயிகள் விதைக் கம்பெனிகளின் அடிமைகளாக்கப்படுவர்.

மூன்றாவது உலக நாடுகளின் விவசாயப் பன்முகத் தன்மை மண்ணின் தன்மை, வெப்பநிலை இவற்றிற்கு ஏற்ப விவசாயிகள் உருவாக்கிக் கொண்ட பல்லாயிரக்கணக்கான பயிரினங்கள் அழியும். பச்சைப் புரட்சி ஏற்கனவே நம்மிடமிருந்த 30,000க்கும் மேற்பட்ட நெல்வகைகளை ஒழித்து விரல்விட்டு எண்ணும் சிலகுட்டை ரகங்களுக்குள் அடக்கிவிட்டது. கம்பெனிதரும் இன விதைகள் விதைக்கப்படுவது உணவுப் பாதுகாப்புக்கு ஆபத்தை உண்டாக்கும். ஏதாவது ஒரு பூச்சித் தாக்குதலால் ஒரு பயிர் அழியும்போது, வேறு பயிரினம் தப்பிக்கும் இயற்கையின் பாதுகாப்பு முறை முற்றாக இல்லாத போது, பயிர் அழிவு, கடுமையான உணவுப்பஞ்சம், சாவுகள் நிகழ வாய்ப்புகள் உண்டு. எனவே இதை மரண விதை என்று சர்வதேச கிராமப்புற முன்னேற்ற நிதியகம் எச்சரிக்கிறது.

இந்த மரபணு மாற்று விதைகளில் உருவாகும் பயிரின் மகரந்தம் காற்றில் பரவி, அருகில் உள்ள வேறு பயிரினங்களின் மலர்களில் கலக்கும்போது, அதுவும் மலட்டு விதைகளைப் பெறும் ஆபத்து உள்ளது. இது தொடர் விளைவாக விவசாயத்தை மட்டுமல்ல, மக்களையும் பாதிக்கும்.

"உலகின் 78 நாடுகளில் இந்த மலட்டு விதைகளை ஏகபோகமாக மாண்சான்டோ

www.padippakam.com



விதைக்கப் போகிறது. உணவு உற்பத்தியும், வினியோகமும் லாபமே குறிக்கோளாகக் கொண்ட ஒரு கம்பெனியின் கைகளில் விதைகள் சிக்குமானால் உலகின் எதிர்காலம் என்ன ஆகும்" என்று சர்வதேச கிராம மேம்பாட்டு நிதியகம் கவலையுடன் எச்சரிக்கிறது. இது நமது அரசின் காதுகளிலும், அறியாமையில் ஆழ்த்தப்பட்டுள்ள விவசாயிகள் காதுகளிலும் விழுமா?

"மனிதனின் கண்டுபிடிப்புகளில் எதுவும் இதுபோன்ற அழிவுசக்தி கொண்டதில்லை. பயிரினங்கள், கால்நடைகள் மட்டுமின்றி மனிதகுல எதிர்காலம் கூட இந்த கம்பெனிகளின் கையில் வந்துவிட்டது. இவர்களின் ஒரே முட்டாள்தனத்தால் பூமியின் எதிர்காலமே இருண்டுபோகும். வியாபாரத் தந்திரம் தர்மத்திற்குப் புறம்பானது. அறிவுக்கு ஒவ்வாதது. பைத்தியகாரத்தனமானது, ஆபத்தானது, மனிதாபிமானமற்றது. தடைசெய்யப்பட வேண்டியது" என சர்வதேச ஆர்க் அமைப்பு எச்சரிக்கிறது.

"இறைவா நான் விதைக்கும் இந்த விதை ஒன்றுக்கு நூறாக முளைக்கட்டும். மீண்டும் மீண்டும் முளைத்து எனக்கு வாழ்வு தரட்டும்" என்பதே உழவனின் பிரார்த்தனை.

ஆனால் மாண்சான்டோவோ, நான் தரும் இவ்விதை இத்துடன் முளைக்கும் திறன் இழந்து மலடாகட்டும். எனக்கு லாபம் குவியட்டும்" என்கிறது.

**மாண்சான்டோவின் வடிவுரிமை சாம்ராஜ்யம் :**

இதுவரை தமது கண்டுபிடிப்புகளுக்கு வடிவுரிமைகளை உடமையாக்கிக் காசாக்கிய மேலைநாடுகள், இயற்கை மனிதர்க்கு வழங்கிய அரிய செல்வங்களிலும் தனது அறிவியல். வித்தைகளைப் புகுத்தி, அவற்றையும் தனது தனியுடைமையாக்கி கொண்டு எல்லையற்ற தனது பேராசையை வளர்க்க நினைக்கின்றன. மாண்சான்டோ புதிது புதிதாக மரபணு மாற்ற தொழில நுட்பத்தால் பல விதைகளை உற்பத்தி செய்து வடிவுரிமை பதிவு செய்துள்ளது. பூச்சி தாக்குதல் தாங்கும் தக்காளி, உருளை, பருத்தி, சோளம், சோயா அதிக விளைச்சல் தரும் வகைகள், அதிக புரோட்டீன் சத்துக் கொண்டவைகள், வண்ணத்துடன் காய்க்கும் பருத்தி, நீண்ட இழை கொண்ட பருத்தி, ரவுண்டப் தாக்காத கோதுமை, அரிசி, குறைந்த எண்ணெய் குடிக்கும் வறுவல் உருளை, மீனெண்ணெய்க்கு மாற்றாக DHA எண்ணெய், மருத்துவ குணமுடைய தானியங்கள், காய்கறிகள், புற்றுநோய் தடுக்கும் மருந்து, மூட்டுவலி, ரத்தக்கொதிப்பு, மருந்து, மகளிர்க்கான ஹார்மோன்கள், தூக்க மருந்துகள், தனித்தனி பூச்சிகளுக்கும், களைகளுக்குமான மருந்துகள், என நூற்றுக்கணக்கானவற்றை மனித குலநன்மைக்காக அன்றி தனது லாபத்துக்காகக் கண்டுபிடித்து முடக்கி வைத்துள்ளது. இந்த நிலையில் உணவு – விவசாயம் – மேம்பாடு என்ற போலி கோஷத்துடன் உலக நாடுகளை விலை பேச வருகிறது மாண்சான்டோ. சென்ற நூற்றாண்டில் முடிந்து போன காலனியாதிக்கம், புதிய வலிமை மிக்க மாற்று வடிவம் பெற்று உலகமயம், தாராளமயம், அறிவியல் தொழில் நுட்பம் என்ற பெயரில் மூன்றாவது உலக நாடுகளை ரிமோட்கண்ட்ரோலில் ஆட்சிநடத்தப் புறப்பட்டுள்ளன. இவற்றின் கவர்ச்சிகரமான

படிப்பகம்

www.padippakam.com



அறிவியல் வேஷம், வலிமைமிக்க டாலர் பின்னணி, திறமைமிக்க ஏமாற்று வித்தைகள் இவற்றிற்கு பலியாகாமல் தமது மக்களைக் காக்கும் கடமையும் தெளிவும் மூன்றாவது உலக நாடுகளின் தலைவர்களுக்கு இன்று மிகவும் தேவை. இந்தியா, சீனா போன்ற நாடுகளின் தொலைநோக்குள்ள தலைமையினாலேயே மூன்றாவது உலக நாடுகளை மீண்டும் ஒரு அடிமைத்தளையில் வீழ்ந்துவிடாமல் காக்கமுடியும்.

# மாண்சான்டோ பொய்யின் வடிவம்

**மாண்சான்டோ பொய் I**

"நாங்கள் இனி ரசாயனக் கம்பெனி அல்ல. உயிரியல் விஞ்ஞான நிறுவனம்"

**உண்மை :** இன்றைய தேதி வரை டூபாண்ட், பேயர், நோவரிட்ஸ் போன்ற உலகின் முன்னணி ரசாயனக் கம்பெனிகளை விடவும் பலமடங்கு அதிக விற்பனை உள்ளது மாண்சான்டோ. இதன் பெரும் பகுதி வருமானம் இன்னமும் ரசாயனங்கள் மூலமேயன்றி உயிரியல் தயாரிப்புகள் மூலமல்ல.

ஆதிமனிதன் கண்டுபிடித்த நெருப்புகூட கைகளைச் சுடுகிறது. வீதியில் சென்றால் விபத்து நடக்கிறது. அதிக சத்தம் கூடக் காதைக் கெடுக்கிறது. அதுபோல ரசாயனங்களாலும் சில கேடுகள் உண்டு. ஆனால் ரசாயனம் தரும் நன்மைகள் ஏராளம் என நீதிபேசித் தன் கொடிய ரசாயனங்களை விற்கும் விளம்பரயுக்தி மாண்சான்டோவினுடையது. இவர்களின் ரசாயன ஏமாற்றுகளை நீண்டநாள் காசு தராது என்ற உடன் உயிரியல் வேடம் போடுகிறது மாண்சான்டோ.

சிலிகான் வேலியின் சில்லுப் புரட்சிபோலத் தனது மரபியல் தொழில் நுட்பத்தால் உலகை ஆள வேண்டும் என்பது மாண்சான்டோவின் பேராசை.

**மாண்சான்டோ பொய் II**

மாண்சான்டோவின் மரபியல் பயிர்களுக்கு பூச்சிகள் தாக்குதலைத் தாக்குப் பிடிக்கும் சக்தியுண்டு. எனவே செலவு குறைவு.

**உண்மை :** பூச்சிகளிலிருந்து இவை பாதுகாக்கப்பட்டது என்பது தவறு என்பதை அனுபவம் கூறுகிறது. சிபிசியில் ரவுண்டப் பருத்தி விதைத்தவர்கள் பேரிழப்புக்குள்ளாகி நஷ்ட ஈடு கேட்கின்றனர்.

க்ளைபோசேம் எனும் ரவுண்டப் மண்ணையும் நீரையும், நுண்ணுயிர்களையும், மீன்களையும் பாதிப்பதாகவும் மனிதனின் இதயத்தை பலவீனப்படுத்துவதாகவும் உடலில் ஈஸ்ட்ரேஜன் அதிகரித்து ஹார்மோன் தொல்லைகள் உண்டாக்குவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



. ரவுண்டப் சோயாவை உண்ட பசுக்களின் பாலில் அதிக ரசாயனம் குவிகிறது. சுற்றுச்சூழலும் கெடுகிறது.

**மாண்சான்டோ பொய் III**

**மரபியல் தொழில் நுட்ப BT பருத்தியை (Bacicillous பூச்சி தாக்காது. பூச்சிக் கொல்லி தேவையில்லை, செலவு குறைவு.**

**உண்மை :** அமெரிக்காவில் 10 லட்சம் ஏக்கரில் இதைப் பயிரிட்டவர்கள் பூச்சிதாக்குதலால் நஷ்டப்பட்டு வழக்குத் தொடுத்தனர். டெக்சாஸ் விவசாயிகள் முன்னைவிடவும் இதற்கு அதிக ரசாயனங்களைத் தெளிக்க நேர்ந்தது என்கின்றனர். பயிருக்கு நன்மை செய்யும் தேனீக்களும், பட்டாம் பூச்சிகளும் சாகின்றன என்கிறது ஸ்வீடன் ஆய்வு

இயற்கை நேயம் மிக்கது. செலவு குறைவு என்பது எத்தனை உண்மை என்பதை நூற்றுக்கணக்கில் தற்கொலை செய்து கொண்ட ஆந்திர விவசாயிகளின் அனுபவம் நமக்கு உணர்த்தும்.

**மாண்சான்டோ பொய் IV**

**rBGH செயற்கை ஹார்மோன் பயன்பாட்டால் பால் அதிகம் சுரக்கும். கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும் பாதிப்பில்லை.**

**உண்மை :** பால் சுரப்பைத் தூண்டும் இந்த ஹார்மோன் பாலைச் சுரக்கச் செய்வது உண்மையே. ஆனால் பாலில் ரத்தத்தின் வெள்ளை அணு காணப்படுகிறது. மாட்டுக்கு மடிவீக்கம், கட்டி, புற்றுநோய், கன்று வளர்ந்த மடியுடன் பிறப்பது, பால் சுரப்பது. பிறவிக் குறைகளுடன் பிறக்கின்றன. ஈஸ்ட்ரஜன் அதிகமாவதால் பெண்ணுக்கு மலட்டுத்தனம். சிறுவயதில் பருவமடைதல் ஆணுக்கு மார்பு வளர்ச்சி ஆகியன உண்டாகின்றன.

ஹார்மோன் தரப்படும் பசுக்களுக்கு ஒட்டுமொத்தத்தில் பார்த்தால், செலவு அதிகமே என்கின்றனர். ஐரோப்பிய விவசாயிகள்.

**மாண்சான்டோ பொய் V**

பெருகிவரும் மக்கள் தொகைக்கு தற்போதைய விவசாய முறைகளால் உணவளிக்க முடியாது. விளைச்சல் அதிகரிக்கவும், பஞ்சம் தவிர்க்கவும் மரபியல் தொழில் நுட்பம் அவசியம்.

**உண்மை :**

★ உலகெங்கும் உள்ள பன்முகப் பயிரினங்கள் அழிக்கப்பட்டு ஒருசில வகைகளே எங்கும் பயிரிடப்படும். அமெரிக்காவிலிருந்த 6,000 ஆப்பிள் வகைகளில் இன்று மிஞ்சி நிற்பவை 6 வகைகள் மட்டுமே. இந்தியா தனது 30,000 வகை நெல்

படிப்பகம்

www.padippakam.com



வகைகள் இழந்து விரல்விட்டு எண்ணும் சில குட்டைரகங்களுடன் குறுகிப்போகச் செய்தது பச்சைப் புரட்சி.

- ★ இந்த ஓரினப் பயிர் பூச்சி தாக்குதலால் அழிவுக்குள்ளானால் உலகம் முழுமையும் பாதிக்கப்பட்டு சமாளிக்க முடியாத பெரும் பஞ்சம். மாபெரும் உயிரிழப்புகள் நேரிடும்.
- ★ விவசாயம் என்பது உயர்நுட்பத் தொழிலாகும் போது உண்டாகும் அதிகச் செலவால் சிறு விவசாயிகள் கட்டுபடியாகாததால், நிலங்களை விற்று, கூலிகளாகி, பட்டினி கிடந்து வாழ்விழந்து போவர். மூன்றாவது உலக நாடுகளின் சிறு நிலவுடமையாளர்கள் ஒழிக்கப்படுவர்.
- ★ மொத்தத்தில் மாண்சான்டோவின் விதையும், ரசாயனமும் விற்கும். ஆனால் மக்கள் விவசாயத்தை இழந்து மக்களின் உணவுத் தேவை ஈடு செய்ய முடியாத நிலை ஏற்படும் என்கிறது கிரீன்பீஸ்.
- ★ இன்றைய உலகின் நிலப்பரப்பு மண்வளம், நீர்வளம் இவற்றை முறையாகப் பயன்படுத்தினால் வளரும் மக்கள் தொகைக்குத் தேவையான உணவு தரமுடியும். இன்றைய பஞ்சங்களுக்குக் காரணம் உணவின்மையன்று. உணவுப் பொருட்கள் வினியோகத்தில் உள்ள பாரபட்சமே. அமெரிக்காவில் அதிகம் விளையும் கோதுமையும், ஆப்பிளும் விலைச் சரிவைத் தவிர்க்க அழிக்கப்படும். அதே வேளையில் எத்தியோப்பியாவிலும், சோமாலியாவிலும் மக்கள் ஆயிரக்கணக்கில் பட்டினியால் மடிகின்றனர். உலக மக்களின் உணவுப் பாதுகாப்புக்கு தேவை உணவுப் பகிர்வே.

## வங்கத்தில் மாண்சான்டோவின் தில்லுமுல்லு :

வங்கத்தில் ஏழை விவசாயிகளுக்கு அடமானமின்றிச் சிறுகடன் வழங்கும் வங்கிகளை 38,000 கிராமங்களில் துவங்கிய யூனுங் உலகெங்கும் பாராட்டப்பட்டார். 1998ல் மாண்சான்டோ வலியச் சென்று பங்குதாரராக ஆனது. விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பத்திற்கு மாறுவதற்குச் சிறுகடனாகத் தர ரூ.6 கோடியை மாண்சான்டோ தந்தது. கிராமத்துப் பெண் கையில் செல்லுலார் போனுடன் நவீன உலகில் நுழைவாள் என்று விளம்பரம் செய்கிறது மாண்சான்டோ. சமீபத்தில் தலையில் மஞ்சள் ஹெல்மெட்டுடன் சிரிக்கும் சித்தாளைப் போட்டு தான் இந்தியாவின் முன்னேற்றத்தின் கருவி என்று சூழல் கெடுக்கும் MNC டூபாண்ட் விளம்பரம் செய்தது நமது நினைவில் வருகிறது.

இவர்கள் உருவாக்குவது வளர்ச்சியல்ல, வீக்கம். சிந்தனையை மழுங்கடிக்கும் நுகர்வுக் கலாச்சாரம்; பண்பாட்டுச் சீர்குலைவு அவ்வளவே. மாண்சான்டோ வழங்கும் 6 கோடி ஏழை விவசாய நாடான உலகத்திற்குப் பெரிதாகத் தோன்றும் போதிலும், இது ஐரோப்பாவில், மாண்சான்டோ விளம்பரத்திற்குச் செலவிடும் பணத்தில் 6%, அதன் இலாபத்தில் 0.002%. ஏழை நாடுகளை விழவைக்க வீசும் சின்ன இரை இது.

இந்த வலைவீச்சிலிருந்து மக்களைக் காக்க சூழல்வாதிகள் குரல் கொடுத்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



மாண்சான்டோ நுழைவை எதிர்த்தனர். விளைவு மாண்சான்டோ கிராமான் விலகி ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொண்டது. விழிப்புடன் செயல்பட்டால் ஆபத்தைத் தடுக்கலாம் என்பதை உலக நிகழ்வு உணர்த்துகிறது.

## இந்திய மண்ணில் மாண்சான்டோ

1998ல் இந்தியாவின் மிகப்பெரிய விவசாய நிறுவனம் மேஹீகோ அங்கு 24 மடங்கு அதிகப் பணம் கொடுத்து பங்குதாரராகச் சேர்ந்தது மாண்சான்டோ. "இந்தியா மீதான படையெடுப்புக்கு மேஹீஹோ ஒரு கருவி. 2000த்தில் மாண்சான்டோ மரபியல் விதைகள் இந்திய மண்ணில் பெருமளவு பயிரிடச் செய்வோம்" என்று உறுதியுடன் கூறுகிறார் அதன் தலைவர் ஜேக் கென்னடி.

பெங்களூரில் 2 1/2 கோடி டாலர் முதலீட்டில் ஒரு பெரிய விதை உற்பத்தி நிலையத்தைத் துவங்கியுள்ளனர். இவர்களுக்குத் தனது அதிநவீன இந்திய அறிவியல் கழகத்தின் பரிசோதனைக் கூடத்தையே தாரை வார்த்துள்ளது சுதேசியம் பேசும் இந்திய அரசு. ஆராய்ச்சி என்ற பெயரில் விலை மதிப்பற்ற இந்திய மரபணுச் செல்வங்கள் கொள்ளையடிக்கப்படும். அவற்றை வடிவுரிமை செய்து கொண்டு காலம் காலத்திற்கும் அவர்கள் நம்மைச் சுரண்டுவர். நமது மக்கள் காலம் காலமாக உருவாக்கிய நுட்பங்கள், பாரம்பரிய முறைகள் யாவும் கைவிடப்படும்.

மாண்சான்டோ தனது அழிவு ரசாயனங்களை விற்றுக் காசாக்கி, உலகின் மிகப்பெரிய சந்தை திறந்து விடப்பட்டுவிட்டது. மாண்சான்டோவின் நுழைவு புதிய காலனியாதிக்கத்தின் நுழைவு. இரண்டாவது அடிமைத் தளத்தின் துவக்கம்.

"இந்திய விவசாயத்தின் மீதான எமது ஆளுமை 20 ஆண்டுகள் முன் பசுமைப் புரட்சியில் புகுத்தப்பட்ட குட்டைரக நெல்மாசெட்டுடன்" என்று பெருமையுடன் கூறுகிறது மாண்சான்டோ.

பெரும் மக்கள் தொகை கொண்ட இந்திய கிராமங்கள் தமது மக்கள் சக்தியைப் பயன்படுத்தித் தமது வயல்களில் தேவையற்ற களைகளை மட்டும் அகற்றும் பாரம்பரியம், ரவுண்டப் களைக்கொல்லிகளால் கொல்லப்படும் வேலையில்லாத் திண்டாட்டம், நகரம், நோக்கிய இடம் பெயரல், கலாச்சாரச் சீர்குலைவுகள் யாவற்றுக்கும் முன்னோடி மாண்சான்டோவின் வரவு.

## மனித உரிமைகளை மதிக்காத மாண்சான்டோ

எல்லா ஆதிக்க வெறியர்களையும் போல், உணவு ஏகாதிபத்தியப் பேராசை கொண்ட மாண்சான்டோ தனது கேள்வி கேட்பாடற்ற அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள நாகரீக உலகின் அடிப்படை மனித உரிமைகளாக எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகியவற்றை நசுக்குவதில் முன்னிற்கிறது.

மாண்சான்டோவின் சதிவலைப் பின்னல் விவசாய ஆய்வுகளை

படிப்பகம்

www.padippakam.com



வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் "விதைக்கு எதிராக" புத்தகத்தை வெளியிட முடியாது தடுத்தனர். தனது கௌரவத்திற்குக் கேடு என மானநஷ்ட வழக்குத் தொடுத்து மிரட்டியது.

பசுமாட்டிற்குப் பால் அதிகம் சுரக்க மாண்சான்டோ தயாரித்த RBGHன் கேடுகளை அம்பலப்படுத்திய வில்சன் ஆர்க் மீது வழக்குத் தொகுத்துத் தடுத்து வைத்துள்ளனர்.

கர்னாடகத்தில் மாண்சான்டோ பயிர்ச் சோதனையைப் பிடுங்கி அழித்தது போல், இங்கிலாந்தின் விவசாயிகளும் செய்தனர். இதில் ஈடுபட்ட 5 பெண்கள் மீது வழக்குத் தொடுத்து கைது செய்துள்ளது மாண்சான்டோ.

பலவீனமானவர்களை விலைகொடுத்து வாங்குவது, போட்டிக் கம்பெனிகளை விழுங்குவது, எதிர்ப்பவர்களைச் சட்ட ஓட்டைகளை வைத்து மடக்குவது, கவர்ச்சியுடன் பொய்களை விளம்பரப்படுத்தி ஏமாற்றுவது என அனைத்துத் தந்திரங்களையும் கையாளும் மாண்சான்டோவுக்கு எதிராக உலகெங்கிலும் கையாளும் மாண்சான்டோவுக்கு எதிராக உலகெங்கிலும் உள்ள இயற்கை ஆர்வலர்களும், மனிதநேயம் கொண்டவர்களும் ஒரு தேவ அசுரப் போராட்டமே நடத்தி வருகின்றனர். பணபலமோ, பதவி பலமோ அற்ற சத்தியமே துணையாகக் கொண்ட இந்த எளிய மனிதர்கள், மாண்சான்டோ அரக்கனை வெல்வார்களா? குறைந்த ரசாயனம், குறைந்த செலவு, அதிக விளைச்சல், உணவுப் பாதுகாப்பு என்றெல்லாம் மாரீச வேடமிட்டுவரும் மாண்சான்டோவை அடையாளம் கண்டு இந்திய விவசாயிகள் விரட்டுவார்களா? இதில்தான் பூமியின் நலன் இயற்கையின் பாதுகாப்பு, மனித குலத்தின் எதிர்காலம் யாவும் உள்ளது.

## மாண்சான்டோவின் வரவு

மாண்சான்டோ ஒரு வியாபார நிறுவனமோ, ரசாயன கம்பெனியோ, மரபியல் விவசாய முன்னோடியோ அல்ல. வாஸ்கோடகாமாவின் தொடர்ச்சி. 500 ஆண்டுகால அடிமைத்தனத்தின் பின் விடுதலை பெற்ற நாடுகளுக்குப் புதிய வேடமிட்டு வரும் அடிமைத்தனம். மாண்சான்டோ பல நூறு மைல்களுக்கு அப்பாலிருந்தே நமது வளங்களைக் கொள்ளையிடும் க்ளைவ், கொலம்பஸ், பொய்யால் உலகை ஏமாற்றும் கோயபல்ஸின் உலகையே தன் காலடியில் கொண்டுவர நினைக்கும் ஹிட்லரின் புதிய அவதாரம். நமது தலைவர்களையே நமக்கு எதிரானவற்றைச் செயல்படச் செய்யும் ரிமோட் கண்ட்ரோல் ஆட்சியாளர்கள். மொத்தத்தில் மாண்சான்டோவும், பில் கேட்டும் நமது இறைமாட்சிக்கு முடிவு கட்ட வந்த புதிய காமாக்களே. இதை வளர்ச்சி விஞ்ஞானம் என்றெல்லாம் ஆசைகாட்டும் இவர்களது வெள்ளைப் பளபளப்பில் நமது இன்றைய ஜமோரிகள் வீழ்ந்து போவார்களா? ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் மீண்டும் வீழ்ந்து கருகிப் போகுமா? ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலையின் விடிவெள்ளியாக உதித்த இந்தியா இரண்டாவது அடிமைத்தளையிலிருந்து உலக நாடுகளைக் காக்கும் முன்னணி வீரனாகக் களம் புகுமா? காலமல்ல . . . நமது விழிப்புணர்வே சரியான பதில் சொல்லும்.

- மருத்துவர் ஜீவா

படிப்பகம்

www.padippakam.com

# நினைவு கூர்வோம்

## திப்பு தியாக 200-வது நினைவு நாள்

வெள்ளையர் ஆதிக்கம் வேரூன்றுவதைத் தடுக்கத் தன்னுயிரீந்த விடுதலைப் போரின் முன்னோடி. பிரிட்டிஷ் கடல்படையை வெல்ல சுதேசிக் கப்பல் கட்டிய தேசபக்தன் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம் தடுக்க சுதேசி வணிகம் வளர்த்த உண்மை சுதேசி. வெள்ளையரை விரட்ட இந்திய மன்னர்களை இணைக்க முயன்ற ஒற்றுமையாளன். பிரிட்டனுக்கு எதிராக எகிப்தை, பாரசீகத்தை, நெப்போலியனை இணைத்த ஏகாதிபத்திய எதிர்ப்பாளன். மராட்டியக் கொள்கையரிடமிருந்து சிருங்கேரி மடத்தை மீட்டுத் தந்த மத நல்லிணக்கக் காப்பாளர். சீரங்கப்பட்டிணம், நஞ்சன் கூடு, மேலக்கோட்டை, காஞ்சி, குருவாயூர் கோயில்களைப் பேணிய சமய ஒருமைப்பாட்டாளன். உழுபவனுக்கு நிலம், அரசுத்துறை வணிகம், சிறு முதலீட்டுக்கு அதிக வட்டி, ஆடம்பரமற்ற அரசு என நல்வழி காட்டிய சமத்துவவாதி. விவசாயம், பட்டு உற்பத்தி, புதிய தொழில்கள் இவற்றில் புதுமைகள் புகுத்திய நவபாரதச் சிற்பி. 200 ஆண்டுகள் முன் அன்னியராட்சி தடுக்க விழுப்புண் ஏற்று களத்திலே மாண்ட மைசூர் புலி.

– மருத்துவர் ஜீவா முதலியவர்கள்
வெளியிட்ட அறிக்கையிலிருந்து.

---

## அறிஞர் குழந்தைசாமி அவர்களின் பார்வைக்கு :

கல்வியை சந்தைப்படுத்துவது குறித்து 'திரைகடல் ஆடிவரும் தமிழ்நாதம்' நேர்காணலில் (6.5.99 அன்று) அறிஞர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் உடன்பாட்டு முறையில் தன் கருத்தை வெளியிட்டிருக்கிறார். அறுபதுகளில் கடைப்பிடிக்கப்பட்ட கல்விக் கொள்கை 99–இல் மாறத்தான் வேண்டும் என்கிறார். வணிகவியல், கணனிப் பயன்பாடு முதலிய தொழிற்கல்விகளை மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கு உரிய தொகை தருவது தேவை என்கிறார். கல்வியை சந்தைப்படுத்துவதற்கான தேவை இன்று ஏற்பட்டிருக்கிறது என்கிறார்.

இந்த நியாயத்தை நாம் ஏற்றுக்கொள்வதென்றால் சுயநிதிக் கல்லூரிகளை நாம் மறுக்க முடியாது. தொடக்கக்கல்வி முதற்கொண்டு அனைத்துவகை கல்வியையும் தனியாரிடம் அரசு ஒப்படைப்பதைக் கூட நாம் ஏற்கவேண்டும். கணனி, வணிகம் முதலிய கல்விகள் முதலாளியப் பெருக்கத்திற்கு உரியவை. இன்று செயற்படுவது மக்கள் நலன்களுக்கு எதிரான சீர்கெட்ட முதலாளியம். இதை திருத்தி அமைக்க முடியுமென்று யாருமே சொல்ல முடியாது. உலகளவில் செயற்படும் அமெரிக்கா முதலிய நாடுகளின் ஆதிக்கத்தோடு ஒத்து செயற்படுவது இந்த முதலாளியம். தமிழுக்கெதிராக ஆங்கிலத்தை ஆதரிப்பது இந்த முதலாளியம். தமிழின் ஆக்கத்திற்காக ஓயாமல் எழுதும் அறிஞர் குழந்தைசாமி அவர்கள் இது குறித்து சிந்திக்கவில்லையா?

படிப்பகம்

www.padippakam.com

நிகழ் : தமிழ் நேயம் (தனிச்சுற்றுக்கு மட்டும்) நன்கொடை ரூ 5/=




## தாய், மகள் தீக்குளித்துத் தற்கொலை
## காப்பாற்றச் சென்ற மகனும் பலி

## மீண்டும் 'காலணி' ஆதிக்கம்!

## கார் – லாரி மோதல்

## நெஞ்சு பொறுக்குதில்லையே







## சகதி மசாலா

## கோர்ட்டில் நடந்த கொலை:

ஆசிரியரும் வெளியிடுபவரும்

கி.பழனிச்சாமி (ஞானி)

123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர் 641 009

அச்சாக்கம் :

ஜி.எம்.சிஸ்டம்ஸ், 10வது வீதி, காந்திபுரம், கோயமுத்தூர்.

படிப்பகம்